Government of Karnataka

# செம்மொழித் தமிழ்

## CHEMMOZHI THAMIZH

### முதல் மொழி

**FIRST LANGUAGE TAMIL**

# 8

பாகம் - 2

**ஆம் வகுப்பு**

**STANDARD**

@KTBS NOT TO BE REPUBLISHED

**Karnataka Text Book Society (R.)**
6th Cross, Malleshwaram
Bangalore - 560 003.

# பொருளடக்கம்

## அ. செய்யுள்


I **வாழ்த்து**

3. நாட்டு வாழ்த்து 1

II **அறவுரை**

3. இனியவை நாற்பது 3
4. சிறுபஞ்சமூலம் 5

III **தொடர்நிலைச் செய்யுள்**

2. புல் 7

IV **பல்சுவை**

4. முக்கூடற்பள்ளு 12
5. புறநானூறு 14

V **மறுமலர்ச்சிக் கவிதைகள்**

3. தூங்காதே தம்பி தூங்காதே! 15
4. தேன்துளி எழுத்துகள் 18
5. செல்வம் யாரோ! 20


@KTBS NOT TO BE REPUBLISHED

## ஆ. உரைநடை

6. கன்னடக்கண்மணிகள் எண்மர் 23
- புலவர் பசுமலை அரசு

7. சிறப்பு (நாடகம்) 31
- முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

8. பாரதி கண்ட தேசிய ஒருமைப்பாடு 43
- முனைவர். வ. சுப. மாணிக்கம்

9. தருக்கு அடங்கிய எழுத்தர் 48
- டாக்டர். உ. வே. சாமிநாதஐயர்

10. அறிவியல் உங்களுக்காக 54
- நெல்லை சு. முத்து

## இ. இலக்கணம்

| | | |
|---|---|---|
| 6. | இடம் | 61 |
| 7. | காலம் | 62 - 62 |
| 8. | வினைச்சொல் | 62 - 63 |
| 9. | யாப்பு | 63 - 65 |
| 10. | அணி | 66 - 67 |

@KTBS
NOT TO BE REPUBLISHED

## மனப்பாடப் பகுதி

| | | | |
|---|---|---|---|
| 3. | நாட்டு வாழ்த்து | 4 | அடிகள் |
| 5. | நான்மணிக்கடிகை (இரண்டாம் பாடல்) | 4 | அடிகள் |
| 6. | இனியவை நாற்பது (முதல் பாடல்) | 4 | அடிகள் |
| 7. | சிறுபஞ்ச மூலம் | 4 | அடிகள் |
| 9. | புல் (55-60 அடிகள்) | 6 | அடிகள் |

@KTBS NOT TO BE REPUBLISHED

## 3. நாட்டு வாழ்த்து

D8A1L2

தாயே வந்தனம்: இந்தியத்
தாயே வந்தனம்
தாரணிதன்னில் வேறிலை இணையெனப்
பூரண வளந்திகழ் புண்ணிய பூமியென் (தாயே)

நிலவளம் நீர்வளம் நிறைந்ததுன் நாடு
நீண்ட உன் பரப்பிலும் வேறிலை ஈடு
விலையிலும் விளைவிலும் மலிந்ததுன் தேசம்
வேண்டிய யாவும்உன் எல்லையில் வாசம் (தாயே)

ஞானமும் கலைகளுக் கிருப்பிட மாவாய்
நாக ரிகத்தின் பிறப்பிட மாவாய்
தானமும் தவங்களும் தாங்கின துன்கை
தருமம் யாவையும் தழைத்தது மிங்கே (தாயே)

- நாமக்கல். வே. இராமலிங்கனார்

### ஆசிரியர் குறிப்பு:-

நாமக்கல் வே.இராமலிங்கனார் சுதந்திரப் போராட்டக் காலகட்டத்தில் விடுதலைப் போரில் பங்கேற்றுஉப்புச் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட் டுச்சிறைத் தண்டனை பெற்றார். தமிழக சட்ட மேலவை உறுப்பினராகவும் தமிழக அரசின்முதல் அரசவைக் கவிஞராகவும் விளங்கியவர். நடுவணரசு பத்ம பூஷண் என்னும் உயர்ந்த விருதினை அளித்து இவருக்குப் பெருமை நல்கியுள்ளது.

### அருஞ்சொற் பொருள்:

வந்தனம் - வணக்கம், தாரணி - உலகம், பூரணம் - முழுமை, மலிந்த - மிகுந்த,

**கருத்துரை:** இந்தியத் தாயே! வணக்கம். உனக்கு ஈடு இல்லை. முழுமையான வளம் செழிக்கும் அறம் சார்ந்த பூமியும் நிலவளமும் நீர்வளமும் நிறைந்த நாடு, அகன்ற இடத்தைக்

@KTBS NOT TO BE REPUBLISHED

கொண்டு மதிப்பு மிக்க விளைவு மிகுந்த நாடு. வேண்டிய பொருளெல்லாம் இங்கு உண்டு. அறிவு சார்ந்த கலைகளுக்கு இருப்பிடம் நீ . நாகரிகத்தின் பிறப்பிடம்நீ. தானம் தவம் இரண்டும் தாங்கியது உன்கை. தருமம் யாவும் தழைத் தோங்கியதும் இங்குதான்.

## பயிற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை எழுதுக:-**

1. வளம் நிறைந்த பூமி யாது?
2. இந்தியத் தேசம் எவற்றுக்கு இருப்பிடமாகும்?

**ஆ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுக:-**

1. நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை இந்திய நாட்டின் வளங்களை எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?

**II அ) இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:-**

1. "விலையிலும் விளைவிலும் மலிந்ததுன் தேசம்"
2. "தானமும் தவங்களும் தாங்கின துன்கை"

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. வேண்டிய யாவும் உன் ______________ வாசம்
2. நாகரிகத்தின் ___________________ ஆவாய்
3. தருமம் யாவையும் ______________ இங்கே

**III அ) பிரித்து எழுதுக:** வேறிலை, இருப்பிடம்

**ஆ) சேர்த்தெழுதுக:** மலிந்தது + உன்; பிறப்பு + இடம்

**இ) எதிர்ச் சொல் தருக:** நிறைந்தது, இல்லை.

## செய்முறை பயிற்சி.

இந்திய நாட்டின் வளங்களையும் கலைகளையும் உணர்த்தும் படங்களைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பு (ஆல்பம்) ஒன்றைத் தயார் செய்க.

©KTBS NOT TO BE REPUBLISHED

## 3. இனியவை நாற்பது

G7F8S1

1. கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன் இனிதே;
எள்துணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது.

2. வருவாய் அறிந்து வழங்கல் இனிதே
ஒருவர்பாங்கு ஆகாத ஊக்கம் இனிதே;
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்தல் இனிது.

-பூதஞ் சேந்தனார்

**நூற்குறிப்பு:** இனிமையான கருத்துக்கள் அடங்கிய நாற்பது பாடல்கள் இந்நூலில் உள்ளமையால் இந்நூல் இனியவை நாற்பது என வழங்கப்படுகிறது. இன்னா நாற்பது என்ற நூலோடு பெயர் ஒற்றுமை உடையது. கடவுள் வாழ்த்தில் சிவனைக் குறிப்பிடுகின்றார்.

**ஆசிரியர் குறிப்பு:** இந்நூலாசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார். சேந்தனார் என்பது இவரது இயற்பெயர். பூதன் என்பது தந்தையார் பெயர். மதுரையில் தமிழாசிரியராய்ச் சிறந்து விளங்கியமையால் மதுரைத் தமிழாசிரியர் என்றும் சிறப்புப் பெயருடன் வழங்கப்பெற்றார். சேந்தன் என்பது முருகனுக்கு உரிய பெயர்களில் ஒன்று. இவரது காலம் கி.பி 9. ஆம் நூற்றாண்டு.

**கருத்துரை:**

1. ஒருவர், தாம் கற்ற கல்வியைத் தம்மைப் போன்று கற்றவரிடத்தில் எடுத்துக் கூறுதல் மிகவும் இனிமை உடையதாகும்; தம்மை விடக் குணங்களால் சிறந்தவர்களோடு சேர்ந்து பழகுதல் மிகவும் இனிமை உடையதாகும்; ஒரு சிறிதளவும் பிறரிடத்தில் யாசிக்காமல், தம்மால் முடிந்ததைப் பிறருக்குக் கொடுத்து உதவுதல் மிகவும் இனிமை உடையதாகும்:

© KTBS NOT TO BE REPUBLISHED

2. ஒருவன் தனது வருவாயை அறிந்து, பிறருக்குப் பொருளைக் கொடுத்தல் இனிமை உடையதாகும்: பிறரைச் சாராமல் தாமே செய்யும் முயற்சி இனிமை உடையதாகும்; மிகுதியான பயன் கிடைப்பதாக இருந்தாலும், தான் விரும்பியவற்றைச் செய்யாமல், தமது நிலையில் மாறுபாடு இல்லாமல் செய்யும் செயல் இனிமை உடையதாகும்.

**அருஞ் சொற் பொருள்:** உரைத்தல் - சொல்லுதல்; மிக்கார் - குணங்களால் உயர்ந்தவர்; மிகமாண - மிக உயர்ந்தது; எட்டுணை (எள் + துணை - எள்ளளவு) - மிகச்சிறிது; ஈதல் - கொடுத்தல்; வழங்கல் - கொடுத்தல்; பாங்காகாத - ஒரு பக்கம் சாராமல்; பெட்டவை - தான் விரும்பியவை; திரிபின்றி - மாறுதலின்றி.

NOT TO BE REPUBLISHED @KTBS

## பயிற்சி

**I. அ) ஓரிரு தொடரில் விடை தருக:-**

*1. கல்வியை யார்முன்னால் உரைத்தல் மிக இனிதாக இருக்கும்?*

*2. யாரைச் சேர்தல் மிகவும் இனிது?*

*3. வருவாய் அறிந்து எதைச் செய்தல் வேண்டும்?*

*4. எவ்வாறு ஒருவர் வாழ்தல் இனிது?*

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:-**

*1. பூதஞ் சேந்தனார் எவை எவை இனிது என்கிறார்?*

*2. இனியவை நாற்பது பற்றி நூல் குறிப்பு வரைக.*

*3. பூதஞ் சேந்தனார் - ஆசிரியர் குறிப்பு வரைக.*

**II. அ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

*1. கற்றார் முன் ___________ உரைத்தல் மிக இனிதே.*

*2. திரிபின்றி ____________ இனிதே.*

## 4. சிறுபஞ்ச மூலம்

1. நாண் இலான் சால்பும், நடை இலான் நன்நோன்பும்
ஊண் இலான் செய்யும் உதாரமும் ஏண் இலான்
சேவகமும் செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்
நாவகமே நாடின் நகை.

2. பூத்தாலும் காயா மரமும் உள நன்று அறியார்
மூத்தாலும் மூவார் ; நூல் தேற்றாதார்; பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள; பேதைக்கு
உரைத்தாலும் செல்லாது உணர்வு.

-காரியாசான்

**நூல் குறிப்பு:** சிறுபஞ்ச மூலம் என்னும் தொடர், ஐந்து சிறு வேர்கள் என்று பொருள் படும். அவை, சிறுவழுதுணைவேர், நெருஞ்சி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், கண்டங்கத்திரிவேர் என்பன. (வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை இவற்றின் வேர்கள் பெரும்பஞ்ச மூலம் ஆகும்) சிறுபஞ்ச மூலம் என்ற ஐந்து வேர்கள் சேர்ந்த மருந்து, உடல் நலம் பேணுமாறு போல, பாடல்களில் குறித்த ஐந்து கருத்துகளும் உயிர் நலம் பேணுவதால் இந்நூல் சிறுபஞ்ச மூலம் என்று வழுங்கப்படுகிறது.

**ஆசிரியர் குறிப்பு:** இந்நூலின் ஆசிரியர் காரியாசான். காரி என்பது இவரது பெயர். ஆசான் என்பது தொழில் பற்றி வந்தபெயர். இவர் சமண மதத்தைச் சேர்ந்தவர். இவர் மதுரையைச் சேர்ந்தவர். இந்நூலில் 100 பாடல்கள் உள்ளன.

**அருஞ் சொற் பொருள்:** நாண் - நாணம், வெட்கம்; நடை - ஒழுக்கம்; நோன்பு -விரதம்; ஊண் - உணவு; உதாரம் - ஈகை; ஏணிலான் - தகுதியில்லாதவன்; சேவகம் - பணி; தேற்றான் - தெளிவு

NOT TO BE REPUBLISHED ©KTBS

இல்லாதவன்; நாடின் - ஆராய்ந்துபார்த்தல்; நகை - நகைப்பு ஏளனம்; மூத்தாலும் - முதுமை அடைந்தாலும்; மூவார் - முதுமை அடையார்; நாறாத - முளைக்காத; வித்து - விதை; பேதை - அறிவற்றவன்; உரைத்தாலும் - சொன்னாலும்.

## பயிற்சி

**I. அ) ஓரிரு தொடரில் விடைதருக:-**

1. சிறுபஞ்ச மூலம் என்ற நூலை எழுதியவர் யார்?
2. சிறுபஞ்ச மூலம் என்ற தொடர் உணர்த்தும் பொருள் யாது?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை எழுதுக:-**

1. சிறுபஞ்ச மூலம் என வழங்கப் படுவதற்கான காரணத்தை விளக்குக.

@KTBS
NOT TO BE REPUBLISHED

# 2. புல்

## புல் தன் வரலாறு கூறுதல்

### கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

L7T8I7

பசும்புல் என்பெயர்; பட்டபா டெல்லாம்
ஒருபெருங் கதையாம்; உரைப்பதும் எளிதோ?
விரிவிடம் படுமொரு வீட்டின் முன்றிலில்
வளர்ந்தேன் அங்குள மனிதரோ கொடியர்;
தத்தம் மக்களும் தாமுமே என்றும்

பெற்றுப் பெருகிப் பெருங்குடி யாகி
வாடிக் கருதுவர்; வகுத்ததிட லென்? அவர்
வாயிற் படியில் வாடி வணங்கி
வயிற்றிற் கின்றிநா வறண்டு; தண்ணீர்
தண்ணீர் என்று தவித்துத் தவித்து

வாணா ளெல்லாம் வருந்தி நொந்தேன்
குடிக்க நீரும் கொடுத்திலர் பாவிகள்
விண்ணி லிருப்பினும் மண்ணில் யான்படும்
வருத்தமும் வாட்டமும் கண்டுஅவ் வானம்
அளித்தன அமுதம்; ஆர உண்டனன்;

விசும்பின் துளிகள் வீழின் அல்லால்
பசும்புல் தலைஇப் பாரில் காணுமோ?
மனிதரும் போற்ற வாழ்வமோ யாமும்?
கேளீர் கதை இனும், கிடைத்த நீரை
அருந்திப் பலநாள் அயர்வும் நீங்கித்

தெளிந்து நிமிர்ந்தேன் சிறிதென் உடலில்
பச்சையும் பிடித்தது; பார்த்தனர் பாவிகள்
தரிக்கிலர் உள்ளம்; தழைக்கும் தலையைக்
காலால் மிதித்தனர்; கழுத்தையும் அறுத்தனர்
ஆட்டையும் மாட்டையும் அடித்து மேய்த்தனர்

©KTBS NOT TO BE REPUBLISHED

படர்ந்த இடமெலாம் பாழே ஆக்கினர்
இருந்த இடமும் இல்லாது இயற்றினர்
உயிரும் உடலும் குறுகி ஒருசிறு
வேராய்த் தரையுள் வெகுநா ளாக
ஒளிந்திருந்தேன் அவ்வுறை விடந் தேடி

வான்மழைத் தோழன் வந்தெனைக் கண்டு
மனிதன் செயலால் வலிஇழந் தனையோ?
என்துணை இருக்க இடர்உனக் உண்டோ?
அறிவிலி போலும்நீ! அஞ்சேல், அஞ்சேல்;
யாவையும் காப்பவன் ஈசன் என்றெலாம்

தேற்றிய மொழிஎனக்கு ஊற்றமும் உறுதியும்
பெரிதும் அளித்தது ..................................
ஒருதினம் வீட்டில் உள்ளார் அனைவரும்
உறவினர் இருக்கும் ஒரூர் சென்றனர்
வெகுநா ளாகியும் மீண்டிலர் யானும்
இதுவே தருணம் என்று நினைத்து

விரைவில் வளர்ந்து விரும்பிய படியெலாம்
தழைத்துச் செழித்துச் சார்விடம் எங்கும்
படர்ந்து பற்றிப் பல்கிளை யாகி
வாய்ந்த இவ் வித்தாம் மக்களைப் பெற்று
வாழ்ந்திருக் கின்றேன் மற்றவர் வாழும்

வீட்டையும் இடித்து விடும்வலி இந்நாள்
எனக்குண் டாயினும் இழிவென விடுத்தேன்
இணங்கி யிருப்பவர் பிணங்கிப் பிரியவும்
பிணங்கிப் பிரிந்தவர் இணங்கிக் கூடவும்
செய்வினை என்போல் செய்ய வல்ல

மந்திர வாதி இவ் வையகத்து உண்டோ?
செய்பிழை யாவும் தெரிந்து பொறுத்தேன்
பொறுத்தவர் என்றும் பூமி யாள்வார்
எனக்குச் சொந்த மில்லாஇடம் எதாம்?
புல்லே யாயினும் புல்லிய குணமிலை

©KTBS NOT TO BE REPUBLISHED

அற்பர் இகழினும் அறிவால் பொறுப்பேன்
தலையில் மிதிப்பினும் தயவால் சகிப்பேன்
முயற்சி கைவிடேன் முயற்சி கைவிடாத்
திறமுடை யோரைத் திருமகள்
பெரிதும் உவந்து பேணமுன் நிற்குமே.

- கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

**ஆசிரியர் குறிப்பு:** இச் செய்யுளை இயற்றியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவர் சிறந்த பாவலர். எளிய இனிய கவிகள் பாடுவதில் வல்லவர். குழந்தைக் கவிகள் பல இயற்றியுள்ளார். இவர் நாஞ்சில் நாட்டில் தேரூரில் பிறந்தார். தந்தையார் சிவதாணுப்பிள்ளை தாயார் ஆதிலட்சுமி அம்மையார். இவரின் கவிதைகள் மலரும் மாலையும் என்ற நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூலில் புல் தன் வரலாறு கூறும் பாடல் இடம்பெற்றுள்ளது. உமர்கய்யாம் பாடல்கள், மருமக்கள் வழி மாண்மியம் - போன்றவை இவர் எழுதிய வேறு நூல்கள் ஆகும். 'கவிமணி' இவரின் சிறப்புப் பெயராகும்.

**அருஞ்சொற் பொருள் :** முன்றில் - வீட்டின் முன்புறம் வாயில்; ஆரஉண்டனன் = நிறைவாக அருந்தினேன்; விசும்பு - வானம், அயர்வு - சோர்வு, தரிக்கிலர் - ஏற்காதவர். உறைவிடம் - வாழ்விடம், இடர் - துன்பம், ஊற்றம் - ஊக்கம், வித்து - விதை, இணங்கியிருப்பவர் - ஒத்திருக்கும் நண்பர், பிணங்கி - மாறுபட்டு, புல்லிய - சிறுமை; உவந்து பேண - மகிழ்ந்து காக்க.

**கருத்துரை :** புல் என்பது என் பெயர். நான் பட்ட துன்பம் மிகுதி. பெரிய வீட்டின் வாயிலில் வளர்ந்தேன். அங்கு வாழ்ந்த மக்கள் கொடியவர்கள். நான் நீரின்றி வாடி வறண்டு துன்பமுற்றேன். என் துன்பம் கண்டு வான் மழை பெய்தது. வயிறார அருந்தினேன். வானத்திலிருந்து மழைத்துளி விழவில்லையெனில் இவ்வுலகில் புல்லின் தலையைக் கூட காண இயலாது. நான் சற்று வளர்ந்தேன். பொறுக்காத அவ்வீட்டார் என்னை மிதித்து அறுத்தனர். நான் மண்ணுக்குள் சிறு வேராக ஒளிந்து இருந்தேன்.

NOT TO BE REPUBLISHED @KTBS

மழை என் வாழ்விடம் தேடி வந்து என்னைத் தேற்றி ஊக்கமளித்தது. நான் நன்றாக விளைந்து படர்ந்து விதைகளைப் பெற்றுள்ளேன். இப்போது பிறர் வாழும் வீட்டையே இடிக்கும் வலிமையைக் கொண்டுள்ளேன். எனினும் அவ்வாறு செய்வது இழிவு என்று விட்டு விட்டேன். ஒத்த மனம் கொண்டவர்கள் மனம் மாறுபட்டுப் பிரியவும் மனம் மாறுபாடு கொண்டவர்கள் ஒத்து வாழச் செய்வதுமாகிய இந்த நல்ல செயலை என்னை விட யார் இவ்வுலகில் செய்வார்கள்? பிறர் செய்த பிழையைப் பொறுத்துக் கொண்டேன். பொறுமையுடன் இருப்பவரே பூமியை ஆளமுடியும். பிறரை அழிக்கும் இழிவான எண்ணம் இல்லை பிறர் என்னை இகழ்ந்தாலும் பொறுத்துக் கொள்வேன். முயற்சியைக் கைவிட மாட்டேன். முயற்சி உடையவர்களைத் தெய்வம் மகிழ்ந்து வாழ்த்தும்.

## பயிற்சி

**I ஓரிரு தொடர்களில் விடை தருக:-**

1. புல் எங்கு வளர்ந்தது?
2. வீட்டிலிருந்த மக்கள் எப்படிப் பட்டவர்?
3. புல் வாயிற் படியில் எவ்வாறு வருந்தி நொந்தது?
4. எப்போது புல்லின் தலையைக் கூடக் காண முடியாது?
5. தெளிந்து நிமிர்ந்த புல்லை மக்கள் எவ்வாறு அழித்தனர்?
6. புல் தரையினுள் எவ்வாறு மறைந் திருந்தது?
7. ஒரு தினம் வீட்டில் உள்ளவர் எங்கு சென்றனர்?
8. புல்லிற்கு எத்தகைய வலிமை உண்டாயிற்று?
9. புல்லிற்கு எத்தகைய குணமில்லை?
10. திருமகள் யாரை மகிழ்ந்து போற்றுவாள்?

**II மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை எழுதுக:-**

1. புல்லின் வருத்தத்திற்குக் காரணம் என்ன?
2. புல்லின் அயர்வு எப்படி நீங்கியது?
3. வான் மழைத் தோழன் தேற்றிய மொழி யாது?

©KTBS NOT TO BE REPUBLISHED

4. வீட்டிலுள்ளோர் ஊர் சென்ற பிறகு புல் எவ்வாறு வளர்ந்தது?
5. புல் தன்னை எத்தகைய மந்திரவாதி என்று சொல்லிக் கொள்கிறது?
6. புல்லின் உயர்வான குணம் யாது?

**III இடம் சுட்டிப் பொருள் விளக்குக:-**

1. "அங்குள மனிதரோ கொடியர்"
2. "குடிக்க நீரும் கொடுத்திலர் பாவிகள்"
3. "அறிவிலி போலும் நீ அஞ்சேல் அஞ்சேல்"
4. " எனக்குச் சொந்த மில்லா இடம் எதாம்"?
5. "திருமகள் பெரிதும் உவந்து பேண முன் நிற்குமே"

**IV ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுக:-**

1. பசும்புல் பட்ட துன்பங்களை எழுதுக?
2. வான் மழைத் தோழனின் செயல்கள் யாவை?
3. புல்லின் வலிமை எத்தகையது?

**V 1. பிரித்தெழுதுக:-**

பசும்புல், முன்றில், உறைவிடம், பல்கிளை.

**2. சேர்த்தெழுதுக:-**

பெருமை + குடி, விரிவு + இடம், அறிவு + ஆல், ஒரு + ஊர்

**3. எதிர்ச் சொல் தருக:**

பெருங்கதை, வாழ்வு, சிறிது, இணங்கி

**4. தொடரில் அமைத்தெழுதுக : -**

தவித்துத் தவித்து.

**செயல் முறை :** தன் வரலாறு கூறுதல் வகையைத் தெரிந்து, நீ அறிந்த வண்ணம், மாடு, குதிரை, மலர்கள் - இவை தன்வரலாறு கூறுவது போன்று கற்பனை செய்து கூறுக.

© KTBS NOT TO BE REPUBLISHED

## IV. பல்சுவை பாடல்கள்

### 4. முக்கூடற் பள்ளு

ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதேகுறிமலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழ மின்னுதே!
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக் குதே; கேணி
நீர்ப்படு சொறித்தவளை கூப்பி டுகுதே!
சேற்று நண்டு சேற்றில் வளை ஏற்று அடைக்குதே; மழை
தேடி ஒரு கோடிவானம் பாடி ஆடுதே!
போற்று திருமால் அழகர்க்கு ஏற்ற மாம்பண்ணைச் சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக் கொள்வோமே!

**நூல் குறிப்பு:** தமிழ்த்தாய்க்கு அழகு சேர்க்கும் இலக்கிய அணிகலன்கள் பல. அவற்றுள் ஒன்று முக்கூடற்பள்ளு. இந்நூல் எளிமையும் நிலச் சார்பும் கொண்டு கற்பனை வளம் கொண்டது. புலவர் பெரு மக்களால் பாராட்டப் பெற்ற இலக்கியம் முக்கூடற்பள்ளு. பள்ளு இலக்கியங்களில் முதன்மை இடம் பெற்றுத் திகழும் முக்கூடற் பள்ளு, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பொருநை ஆற்றங் கரையில் அமைந்த முக்கூடல் என்னும் நகரில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளது. இந்நூலில் பக்திச் சுவையுடன் உழவியற் செய்திகளும் பின்னிப் புனையப்பட்டுள்ளன. முக்கூடற் பள்ளு என்னும் இந்நூலை எழுதிய ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

**அருஞ்சொற்பொருள்:** வெள்ளம் - தண்ணீர்; கொம்பு - மரக்கிளை;

**கருத்துரை :** ஆற்றில் நாளை வெள்ளம் வருவதற்கான அறிகுறி காணப்படுகிறது; தென்மேற்குத் திசை மின்னலாகிய மலையாள மின்னலும்; இலங்கைப் பக்கத்துத் தென்கிழக்குத் திசை மின்னலாகிய ஈழ மின்னலும் சூழ்ந்து மின்னுகின்றன. நேற்றும் இன்றும் மரக்கிளைகள் ஆடும்படியாகச் சுழற்றிச் சுழற்றிக் காற்று அடிக்கின்றது. கிணற்றில் வாழும் சொறித்தவளை மழை வரப்போவதை அறிந்து கத்துகின்றது.

M2L2J7

© KTBS NOT TO BE REPUBLISHED

சேற்றில் வாழும் நண்டுகள் தன் வளைக்குள் மழை நீர் வந்துவிடாதபடி, சேற்றினால் வளையின் மேற்பகுதியை அடைக்கின்றன. நீர்த்துளியை உண்ணும் வானம்பாடிப் பறவைகள் ஒன்றாகக் கூடி மழையைத் தேடிப்பாடி ஆடுகின்றன.

## பயிற்சி

**I. அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:-**

1. ஆற்றில் எவ்வாறான அறிகுறி காணப்படுகிறது?
2. எவ்வெவ்வாறான மேகங்கள் மின்னுகின்றன?
3. நேற்றும் இன்றும் காற்று எவ்வாறு அடிக்கிறது?
4. கிணற்றுத் தவளை எதை அறிந்து கத்துகின்றன?
5. சேற்று நண்டுகள் என்ன செய்கின்றன?
6. வானம்பாடிப் பறவை எதற்காகப்பாடி ஆடுகின்றன?

**ஆ) இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடை தருக:**

1. முக்கூடற் பள்ளு - நூற்குறிப்பு வரைக.

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:**

1. ஆற்றில் வெள்ளம் வருவதற்கான அறிகுறிகளாக முக்கூடற்பள்ளு கூறும் செய்திகள் யாவை?

**II. அ) இடம் சுட்டிப் பொருள் விளக்குக:**

1. சேற்றுநண்டு சேற்றில்வளை ஏற்று அடைக்குதே; மழை தேடிஒரு கோடிவானம் பாடி ஆடுதே!

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே ________
2. போற்று திருமால் ___________ ஏற்றமாம் பண்ணை

**III. அ) கீழ்வரும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக:**

1. வெள்ளம்; 2. நேற்றும் இன்றும்; ஆடிப்பாடி.

**செய்முறை.**

இப்பாடலைப் பாடி மகிழ்க.

@KTBS NOT TO BE REPUBLISHED

## 5. புறநானூறு

Q1R9Q6

பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவர் புகழ் செந்நாப் புலவீர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப் பதுவே

- கபிலர்

**நூல் குறிப்பு:** புறநானூறு என்பதனை புறம் + நான்கு + நூறு எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இது சங்க கால எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகும். பழங்காலத் தமிழரின் பண்பாடு, கலை, நாகரிகம், அரசியல் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டும் வண்ணம் இலங்குகின்றது. ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முன்னர் தோன்றியதாகக் கருதப்படும் இந்நூலில் உள்ள பாடல்கள் பல்வேறு சூழ்நிலையில் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்றதாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பாடல், பாரியின் கெழுதகை நண்பராகக் கருதப்பட்ட கபிலரால் பாடப்பட்டது.

**ஆசிரியர் குறிப்பு:**

இவருக்கு இயற்கைக் கவிஞர் என்ற பெயர் உண்டு பாரியும் கபிலரும் சிறந்த நண்பர்கள்.

**அருஞ்சொற்பொருள்:**

செந்நா - நல்ல நா; மாரி - மழை; புரத்தல் - காத்தல்.

**கருத்துரை :** நாவன்மை மிக்க புலவர் எல்லாம் பாரி பாரி என்று சொல்லி அவனுடைய பல் புகழைப் பாராட்டி, அவன் ஒருவனையே புகழ்ந்து சொல்வர். இங்கு இவ்வுலகத்தைக் காப்பதற்குப் பாரி ஒருவன் மட்டுமல்லன்; மாரியும் (மழையும்) உண்டு.

### பயிற்சி

**I. அ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடைதருக:**

செந்நாப் புலவர் பாரியைப் புகழ்ந்த விதத்தினை விளக்குக

**ஆ) இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக:**

மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே.

NOT TO BE REPUBLISHED @KTBS

## V. மறுமலர்ச்சிக் கவிதைகள்

## 3. தூங்காதே தம்பி தூங்காதே

G2Z7Y1

தூங்காதே தம்பி தூங்காதே - நீ
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே! (தூங்காதே)

நீ தாங்கிய உடையும் ஆயுதமும் - பல
சரித்திரக் கதைசொல்லும் சிறைக் கதவும்
சக்தியிருந்தால் உன்னைக் கண்டு சிரிக்கும்
சத்திரந்தான் உனக்கு இடம் கொடுக்கும்
(தூங்காதே)

நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானுங் கெட்டார் - சிலர்
அல்லும் பகலும் தெருகல்லா யிருந்துவிட்டு
அதிர்ஷ்டமில்லை யென்று அலட்டிக் கொண்டார்
(தூங்காதே)

விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார் - உன்போல்
குறட்டை விட்டோரெல்லாம்
கோட்டை விட்டார் (தூங்காதே)

போர்ப்படை தனில் தூங்கியவன் வெற்றியிழந்தான் - உயர்
பள்ளியில் தூங்கியவன் கல்வியிழந்தான்!
கடைதனில் தூங்கியவன் முதல் இழந்தான் - கொண்ட
கடமையில் தூங்கியவன் புகழ் இழந்தான் - இன்னும்
பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் - பல
பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா !(தூங்காதே)

**- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

**ஆசிரியர் குறிப்பு:** மக்கள் கவிஞர் எனப் புகழ் பெற்றவர் திரு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள். பொதுவுடைமை சிந்தனையும், பகுத்தறிவுக் கருத்துக்களும் இவரது பாடல்களின் அடிநாதம் ஆகும். 1957 - ஆம் ஆண்டு திரைப்படத் துறையில் நுழைந்தார். 1959 - இல் மறைந்தார். மிகக் குறுகிய காலத்தில் மக்கள் மனத்தை விட்டு அகலாத பல பாடல்களை இயற்றியவர்.

NOT TO BE REPUBLISHED © KTBS

**பாடல் குறிப்பு:** நமக்குப்பாடமாக அமைந்துள்ள இப்பாடல் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் திரை இசைப் பாடல்கள் என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்நூலைத் தொகுத்தவர் நே. ஜீவபாரதி. இப்பாடல் இடம்பெற்ற திரைப்படம் புரட்சித் தலைவர், திரு. எம். ஜி. ஆர் நடித்த நாடோடி மன்னன் என்பதாகும்.

**அருஞ்சொற்பொருள்:** சரித்திரம் - வரலாறு, சத்திரம் - வழிப் போக்கர்கள் தங்கும் இடம், முதல் இழந்தான் - முதலீட்டை இழந்தான், அல்லும் பகலும் - இரவும் பகலும்.

## பயிற்சி

**I. அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. சோம்பேறியைக் கண்டு எவையெல்லாம் சிரிக்கும்?
2. கோட்டை விட்டவர்கள் யார்?
3. போர்ப்படையில் தூங்கியவன் எதை இழப்பான்?
4. பள்ளியில் தூங்கியவன் எதை இழப்பான்?
5. பொறுப்புள்ள மனிதனின் தூக்கத்தினால் ஏற்படும் தீமை என்ன?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக:-**

1. சத்திரம் யாருக்கு இடம் கொடுக்கும்?
2. அதிர்ஷ்டமில்லை என்று அலட்டிக் கொள்பவர் யார்?

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:-**

1. தூங்காதே தம்பி தூங்காதே என்று தம்பியை விளித்துப் பட்டுக் கோட்டையார் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

**II. அ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. தூங்காதே தம்பி தூங்காதே நீ ________ என்ற பெயர் வாங்காதே!

2. விழித்துக் கொண்டோரெல்லாம் ________________ கொண்டார்.

3. கடமையில் தூங்கியவன் ____________ இழந்தான்.

**III. சேர்த்து எழுதுக:**

பொழுதை + எல்லாம்

வெற்றி + இழந்தான்

கல்லாய் + இருந்து விட்டு

**IV. பிரித்து எழுதுக:**

தானுங் கெட்டார்

சக்தியிருந்தால்

**செய்முறை:**

இப்பாடலை இசையுடன் பாடி மகிழ்க.

@KTBS
NOT TO BE REPUBLISHED

## 4. தேன்துளி எழுத்துகள்

Y6I5L9

*புத்தம் புதிய பொத்தக வரிசை!*
*எத்துணை அறிவு! எத்துணை மகிழ்ச்சி!*
*பொத்தக முழுதும் தேன்துளி எழுத்துகள்!*
*முத்தெனக் கோத்த கருத்து மாலைகள்!*
*ஒவ்வொரு வரியும் ஒவ்வோர் அறிவு!*
*ஒவ்வொரு பக்கமும் ஒவ்வோர் தேன்குடம்!*
*ஒவ்வொரு நூலும் ஒவ்வோர் அறிஞர்!*
*எத்தனை அறிஞர்உன் பக்கலில் என்றுபார்!*
*அடடா! அவர்தரும் அறிவுக் கீடேது?*
*தொடக்கத் திருந்தே அவர்பின் தொடர்க!*

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

**ஆசிரியர் குறிப்பு :** பெருஞ்சித்திரனார் தனித்தமிழ் இலக்கியப் படைப்பாளர். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர். பள்ளிப் பறவைகள், எண்சுவை எண்பது, கற்பனை ஊற்று, பாவியக் கொத்து என்பன இவருடைய சில நூல்கள்.

NOT TO BE REPUBLISHED © KTBS

**அருஞ்சொற்பொருள் :**

பொத்தகம் - புத்தகம், பக்கலில் - பக்கத்தில் (அருகில்)

### பயிற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. புத்தகம் முழுவதும் எத்தகைய எழுத்துகள் காணப்படுகின்றன?
2. கருத்து மாலைகள் எது போலக் கோக்கப் பட்டுள்ளன?

**ஆ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:**

1. திரு பெருஞ்சித்திரனார் புத்தகத்தைப் பற்றிக் கூறியவை யாவை?

**II அ) இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக**

1. "ஒவ்வொரு நூலும் ஒவ்வோர் அறிஞர் "
2. " அடடா! அவர்தரும் அறிவுக் கீடேது ?"

**III அ) பிரித்து எழுதுக:-**

ஒவ்வொரு; ஒவ்வோர்

**ஆ) சேர்த்து எழுதுக:-**

ஈடு + ஏது ; முத்து + என

**IV கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. ஒவ்வொரு வரியும் ஒவ்வோர் ________________
2. ஒவ்வொரு பக்கமும் ஒவ்வோர் ________________

**செயல் முறை:-**

ஆசிரியர் உதவியுடன் புத்தகங்களின் இன்றியமையாமை குறித்து ஒரு கட்டுரை வரைக.

@KTBS
NOT TO BE REPUBLISHED

## 5. செல்வம் யாரோ

E2A7H4

பொய்கையின் நீலக்கண்கள்
பொன்மேனி பூவின் கைகள்
பெய்மழை வென்ற தண்மை
பிளந்த மாங்கனியின் கன்னம்
மெய்யினைத் தொட்டால் முத்தம்
மீதிடில் பொங்கு மின்பம்
எய்திடும் இவைகள் கொண்டாள்
எழில் நிறை பெண்ணோ? அல்லள்!

நடந்திடில் கால்சிவக்கும்
நானிலம் வியந்து பார்க்கும்
குடம்வழி தேனை ஒக்கும்
குளிரிதழ் சிந்தும் பேச்சு!
இடமில்லை சிரித்து விட்டால்
எழுமின்பம் கொட்டி வைக்க!
உடனிந்த பண்பு பெற்றாள்
ஒண்ணுதற் பெண்ணோ? அல்லள்?

மொட்டொன்று விரிவ தைப்போல்
முகமலர் விரியவந்து
பட்டுடல் அழகு பொங்க
பனியிதழ் தழுவத் தந்து
சுட்டியும் அசைய ! மென்மைச்
சுருள்முடி அசைய ! நின்று
மட்டிலா உவகை சேர்ப்பாள் !
மைவிழிப் பெண்ணோ அல்லள்!

அழுது கண் பொழியும் நீரால்
அனைத்தையும் உரிமை கொண்டு
பழுதிலா மகிழ்வு சேர்ப்பாள்

NOT TO BE REPUBLISHED @KTBS

*பாவையோ? அல்லள் ! என்னில்*
*மொழிக அச்செல்வம் யாரோ?*
*மொழிகுவன் : அதுவே வானில்*
*எழுந்திடும் மதியைக் கையால்*
*எடுத்திட முயல் குழந்தை!*

*-சிற்பி பாலசுப்பிரமணியம்*

***ஆசிரியர் குறிப்பு:*** *கோவை மாவட்டம் ஆத்துப் பொள்ளாச்சியில் கி.பி. 1936- இல் பொன்னுசாமி - கண்டியம்மாள் ஆகியோருக்குப் பிறந்தவர். வானம்பாடிக் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த வானம்பாடி எனச் சிறப்பிக்கப் பெறும் "சிற்பி" யின் இயற்பெயர் பாலசுப்பிரமணியம். நிலவுப்பூ, சிரித்த முத்துகள், திரைப்பூ, ஒளிப்பறவை, சர்ப்ப யாகம், சூரிய நிழல், ஆதிரை முதலிய கவிதை நூல்களை எழுதியுள்ளார். இலக்கியச் சிந்தனை, மலையாளக் கவிதை, அலையும் சுவடும் என்பன இவர் இயற்றிய உரை நடை நூல்கள். தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்ற இவர், மைய சாகித்திய அகாடமியில் முக்கிய பங்கேற்றுச் செயல்பட்டு வருகின்றார். 'செல்வம் யாரோ' என்னும் இக்கவிதை "நிலவுப்பூ" என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.*

***அருஞ் சொற்பொருள் :*** *பொய்கை - குளம், மெய், மேனி - உடல், எழில் - அழகு, மட்டு - எல்லை, உவகை - மகிழ்ச்சி, பழுது - குற்றம், மதி - நிலவு*

## பயிற்சி

**I *அ)* ஓரிரு தொடர்களில் விடை தருக:-**

*1. கன்னம் எவ்வாறு இருந்தது?*

*2. இதழ் சிந்தும் பேச்சு எத்தகைய நிலையில் அமைந்தது?*

© TBS NOT TO BE REPUBLISHED

3. மொட்டு விரிவதைப்போல எது விரிந்தது?

4. குழந்தை எதனைக் கையால் எடுத்திட முயன்றது?

**ஆ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:-**

1. செல்வம் யாரோ என்னும் கவிதையின் வாயிலாகச் “சிற்பி” உணர்த்தும் குழந்தையின் சிறப்பினை விளக்குக.

**II இடம் சுட்டிப் பொருள் விளக்குக:-**

1. “நடந்திடில் கால் சிவக்கும் நானிலம் வியந்து பார்க்கும்”

2. பழு திலா மகிழ்வு சேர்ப்பாள்
பாவையோ அல்லள் ! என்னில்
மொழிக அச் செல்வம் யாரோ?

@KTBS
NOT TO BE REPUBLISHED

**III அ) பிரித்து எழுதுக:-**

நானிலம்

மொட்டொன்று

எழுமின்பம்

**ஆ) சேர்த்து எழுதுக:-**

குளிர் + இதழ்

பழுது + இலா

அ + செல்வம்

**இ) எதிர்ச்சொல் தருக:-**

குளிர்

மகிழ்வு

# ஆ. உரைநடை

R8G4B1

## 6. கன்னடக் கண்மணிகள் எண்மர்



(இந்திய மொழிகளில் உருவாகும் சிறந்த இலக்கியங்களை அடையாளம் காட்டி, ஊக்குவிப்பது; இந்திய மொழி இலக்கியங்களின் திறனை உயர்த்துவது போன்ற நோக்கங்களுக்காகப் பாரதிய ஞான பீட அமைப்பு 18.02.1944 இல் காசியில் தொடங்கப்பட்டது. இதனை நிறுவியவர் திரு. சாகு சாந்தி பிரசாத் ஜெயின் ஆவார். சிறந்த நூலைத் தேர்ந்தெடுக்க 11 பேர் கொண்ட ஒரு குழு உள்ளது. இத்தேர்வுக் குழுவின் முதல் தலைவராக முன்னாள் குடியரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத் இருந்தார். பாரதீய ஞானபீட அமைப்பால் இந்திய மொழிகளில் எழுதப்பட்ட நூலுக்கு வழங்கப்பட்ட பரிசே, ஞான பீட விருதாகும். இவ்விருது 1945 ஆம் ஆண்டிலிருந்து இலக்கிய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இலக்கியத்திற்கு வழங்கப்படும் மிகச் சிறந்த ஞானபீட விருதின் பரிசாக 2 1/2 இலட்சம் ரூபாயும், ஒரு சரசுவதி உருவச் சிலையும் வழங்கப்படுகிறது.)

©KTBS NOT TO BE REPUBLISHED

இலக்கியப் படைப்புகளுக்கான ஞானபீட விருதினை மிகுதியாகப் பெற்றவர்கள் கன்னட அறிஞர்களே ஆவர்! 1. குவெம்பு, 2. த.ரா. பேந்தரே, 3. சிவராம காரந்தர், 4. மாஸ்தி வெங்கடேச ஐயங்கார், 5. வி.கி. கோகாக். 6.யு. ஆர் அனந்தமூர்த்தி, 7. கிரிஷ் கார்நாட், 8. சந்திர சேகர கம்பாரா ஆகியோர் இவ்விருதினைப் பெற்றுக் கன்னட மொழிக்கும், கன்னட இலக்கியத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். அவர்களைப்பற்றி இப்பாடத்தில் நாம் அறிந்து கொள்வோம்.

### 1. குவெம்பு:

இவரது ஊர் குப்பள்ளி. தந்தையார் பெயர் வெங்கடப்பா. இவரது இயற்பெயர் புட்டப்பா. இவை மூன்றன் சுருக்கமாகக் குவெம்புஎனத் தம் பெயரை வைத்துக் கொன்டார்.

1904 - இல் பிறந்த குவெம்பு அவர்கள் தீர்த்தப்பள்ளியில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்தார். அப்போதே ஆங்கில நூல்களை நன்கு கற்றார். இராமகிருஷ்ண ஆசிரமத்தின் தொடர்பால், இராம கிருஷ்ண பரம ஹம்சரின் போதனைகள், விவேகானந்தரின் வீர முழக்கங்கள் ஆகிய கருத்துக்களை நன்கு கற்றார். 78 நூல்களை இவர் எழுதி இருந்தாலும், “ஸ்ரீராமாயண தரிசனம்” என்ற நூலே இவருக்கு ஞானபீடப் பரிசை வாங்கித் தந்தது.

சாகித்ய அகாடெமி விருதும் பெற்ற இவர் 1995 இல் இறைவனடி சேர்ந்தார்.

### 2. பேந்தரே:

1896 - இல் பிறந்த இவரின் இயற்பெயர் தத்தாத்ரேய ராமச்சந்திர பேந்தரே என்பதாகும். அம்பிகா என்ற தம் தாயின் பெயரையும் சேர்த்து அம்பிகாதானய தத்தா என்ற புனை பெயரில் கவிதைகள் எழுதினார். பேச்சு மொழியிலேயே கவிதை பாடி மக்கள் மனத்தில் இடம் பிடித்தார்.

NOT TO BE REPUBLISHED © KTBS

அரவிந்தரின் ஆன்மிகக் கொள்கைகளும் மேல் நாட்டு அறிஞர்களின் தாக்கமும் இவரைப் பெருமைப்படுத்தியது. கவிதை , கதை, நகைச்சுவை, நாடகம், கட்டுரை, மொழி பெயர்ப்பு என ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி உள்ளார். நால்க்கு தந்தி (நான்கு நரம்புகள்) என்ற கவிதை நூலுக்காக இவருக்கு 1973 ஆம் ஆண்டு ஞான பீடப்பரிசு வழங்கப் பட்டது.

ஆங்கிலம், கன்னடம், சமசுகிருதம் ஆகிய மொழிகளில் நல்ல பயிற்சி பெற்ற இவர், தம் தாய்மொழியான மராட்டிய மொழியையும் நன்கு கற்றவர். சுதந்திர வேட்கை கொண்ட இவர், மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் அவர்களின் 'ஜீவன' என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தார்.

**3.சிவ ராம காரந்தர்:**

இவர் 1902 இல் மங்களூருக்கு அருகே உள்ள 'கோட' என்ற ஊரில்சேவி காரந்தருக்கும் இலட்சுமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். காரந்தர் பள்ளிப்படிப்பைத் தமது ஊரான கோடாவிலும், பின்னர் குந்தாபுராவிலும் படித்தார். மகாத்மா காந்தியால் ஈர்க்கப்பட்ட காரணத்தால், ஆங்கிலக் கல்வியை வெறுத்தவர். கல்லூரியில் படிக்காவிட்டாலும், வாழ்க்கை என்னும் பல்கலைக்கழகத்தில் பட்டறிவை மிகுதியாகப் பெற்றவர்.

கருநாடகத்தில் நசிந்த நிலையில் இருந்த 'யக்ஷகான' என்ற தெருக்கூத்துக் கலைக்குப் புத்துயிர் ஊட்டியவர். இக்கலையை இங்கிலாந்து, ரஷியா, ஜெர்மனி ஜப்பான் முதலிய நாடுகளில் நடத்தி, இந்தியப் பண்பாட்டை உலகுக்குக் காட்டியவர்.

கன்னட இலக்கிய நாவலின் தந்தை எனப் போற்றப்படும் இவர் மிகக்குறைந்த நாட்களில் விரைவாக எழுதும் ஆற்றல் பெற்றவர். இவர் எழுதிய மூகஜ்ஜிய கனசுகளு (ஊமைப் பாட்டியின் கனவுகள்) என்ற நாவலுக்கு ஞானபீடப் பரிசு கிடைத்தது.

**4. மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் :** கன்னடத்தின் ஆஸ்தி என்று போற்றப்படும் இவர் 1891 ஆம் ஆண்டு கோலார்

© KTBS NOT TO BE REPUBLISHED

மாவட்டம், மாலூர் அருகேயுள்ள மாஸ்தி என்ற சிற்றூரில் பிறந்தார், தந்தையார் பெயர் இராமசாமி ஐயங்கார், தாயார் திருமலம்மாள். பெங்களூர் சென்ட்ரல் கல்லூரியில் இளங்கலைப் (பி.ஏ) பட்டத்தையும், மைசூர் மகாராஜா கல்லூரியில் பயின்று முதுகலைப் (எம்.ஏ) பட்டமும் பெற்றார். ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகத் தேர்ச்சி பெற்று, தங்கப் பதக்கங்கள் பெற்றார். சிவில் சர்விஸ் - தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்று, உதவி கமிஷனர் ஆனார். பின்னர், மாவட்ட அதிகாரியாகவும், துணைச் செயலாளராகவும், நீதிபதியாகவும் பணியாற்றி நற்பெயர் பெற்றார்.

அரசுப்பணியிலிருந்து தாமாகவே ஓய்வுபெற்று, 1995 இல் இருந்து இலக்கியப் பணியில் ஈடுபட்டார். தம் 20.ஆம். வயதிலேயே 'ஏங்கன மதுவே' என்ற சிறுகதையை எழுதத்தொடங்கி, 70 க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், நாடகங்களையும் எழுதியுள்ளார்.

குடகு மாவட்ட அரச குடும்பத்தின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் கூறும் சிக்க வீர ராஜேந்திரா என்ற கருத்துச் சிறப்புமிக்க நாவலுக்கு 1983 ஆம் ஆண்டு ஞானபீடப்பரிசு வழங்கப்பட்டது.

பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்ற மாஸ்தி அவர்கள் 95 ஆண்டுகள் வாழ்ந்து 1986 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

5. **விநாயக கிருஷ்ண கோகாக்:** 1909 ஆம் ஆண்டு தாரவாடா மாவட்டத்தின் சவணூர் என்ற ஊரில் பிறந்தவர். தந்தையார் பெயர் கிருஷ்ணராயர். விநாயகா என்பது புனைபெயராகும். கன்னடம், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவர். கன்னட மொழியை உயர்நிலைப்பள்ளியில் முதன் மொழியாகப் படிக்க வேண்டும் என்ற அறிக்கையை வெளியிட்டு, அதை நடைமுறைப்படுத்தியவர் இவரே ஆவார்.

கன்னட இலக்கியத்திற்காகச் சுமார் 65 ஆண்டுகள் உழைத்த இவர் ,காவியம், குறுங்காவியம், திறனாய்வு, கட்டுரை, நாவல்,

© KTBS NOT TO BE REPUBLISHED

கவிதை, பயணநூல் எனப் பல துறைகளில் தமது திறமையை வெளிக் காட்டியவர் கோகாக் அவர்கள்.

இவர் எழுதிய பாரத சிந்து ஓஷ்மி, என்ற காவியத்திற்காக ஞானபீடப் பரிசு வழங்கப்பட்டது.

ஆசிரியராகப் பணியைத் தொடங்கிப் பேராசிரியராகித் துணை வேந்தர் ஆனவர். மத்திய அரசின் சாகித்ய அகாடெமியின் தலைவராகவும், ஞான பீடஅமைப்பின் தலைவராகவும் இருந்தவர் டாக்டர் கோகாக் ஆவார்.

**6. யூ. ஆர். அனந்தமூர்த்தி:**

பாராட்டுதலுக்குரிய ஞானபீட இலக்கிய விருதை ஆறாவதாகப் பெற்றவர் உடுப்பி ராஜகோபாலாச்சார்ய அனந்தமூர்த்தி ஆவார். இவர் 1932 ஆம் ஆண்டு சிவமுகா மாவட்டத்தின் தீர்த்த ஹள்ளி அருகே உள்ள மெலிகெ என்ற ஊரில் பிறந்தவர். சீர்திருத்தவாதியான இவர் எஸ்தர் என்ற கிருத்துவரைத் தனது வாழ்க்கை துணையாக்கிக் கொண்டார்.

இளமைக் காலத்தில் இவர் அரசியலில் ஈடுபட்டாலும், அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஒரு சிறந்த எழுத்தாளர் ஆனார். தமது கதைகள்மூலம் இன்றைய சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இவரது சமஸ்காரா (இறுதிச்சடங்கு) என்ற நாவல் திரைப்படமாக வந்துள்ளது. இவருடைய நாவல்களான பாரதிபுர அவஸ்தை, ‘பவ’ போன்றவை மக்களால்பாராட்டப் பட்டன.

கோட்டயம் காந்தி பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றிய அனந்தமூர்த்தி அவர்களுக்கு, அவரின் எந்த நூலுக்கும் என்றில்லாமல் பொதுவாக ‘ஞான பீடப்பரிசு’ வழங்கியுள்ளனர்.

**7. கிரிஷ் கர்நாட்:** கருநாடக இலக்கிய, பண்பாட்டு, உலகில் நாடகக் கலைக்குப் புத்துயிர் ஊட்டியவர்களில் சிறந்தவர் நாகரிக கிரிஷ் கர்நாட் ஆவர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

இவர் 1938 இல் மராட்டிய மாநிலத்தில் பிறந்தவர். வடகன்னட மாவட்டத்தின் சிர்சியில் கல்விகற்று, தார்வாடா நகரில் பள்ளிப் படிப்பை முடித்தார். பிறகு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தத்துவம், அரசியல், பொருளாதாரத் துறையில் ஆராய்ச்சியை மேற்கொண்டார்.

படிக்கின்ற காலத்திலேயே நாடகங்கள் எழுதத் தொடங்கினார். இவரது நாடகங்கள் பழங்கன்னடத்தையும், நாட்டுப் புறச் சார்பையும் மையமாகக் கொண்டவை. இவர் இங்கிலாந்தில் இருக்கும்போது துக்ளக் என்ற நாடகத்தை எழுதினார்.

இவர் எழுதிய 'யயாதி' மற்றும் 'துக்ளக்' நாடகங்களுக்காக 1998. இல் ஞானபீடப் பரிசு வழங்கப்பட்டது.

**8. சந்திர சேகர கம்பாரா:-** கன்னட இலக்கியத்தில் இவர் ஆற்றியுள்ள பணியினைப் பாராட்டி இவருக்கு ஞானபீட விருது வழங்கப்பட்டுள்ளது. கருநாடக மாநிலத்திலுள்ள பெளகாவி மாவட்டத்திலுள்ள கோகாக் தாலுகாவிலுள்ள கோடகரி கிராமத்தில் 1937 - ஆம் ஆண்டு சனவரி 2- ஆம் தேதி பிறந்தார். இவருடைய ஆரம்பநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிக் கல்வியைக் கோகாக் நகரத்திலேயே பயின்றார். கவிஞராகவும் நாடக ஆசிரியராகவும் கிராமியக் கலைஞராகவும் திரைப்பட இயக்குநராகவும் மற்றும் பல்வேறு துறைகளிலும் தடம்பதித்தவராக விளங்கும் இவர் ஹம்பியில் கன்னடப் பல் கலைக் கழகத்தை நிறுவி அதன் முதல்துணை வேந்தராகவும் பணியாற்றினார். கருநாடக நாடக அகாதமியின் தலைவராக 1980 முதல் 1983 - ஆம் ஆண்டு வரையிலும் தேசிய நாடகப் பள்ளிச் சங்கத்தலைவராக 1996 முதல் 2000 - ஆம் ஆண்டு வரையும் பொறுப்பு வகித்துள்ளார். இவர் முகுலு, பெல்லிமீனு, ககோளி சிவபுர, ஆப்த கவனஹளு முதலிய கவிதை நூல்கள், பெம்பட்டிய கண்ணு, திக்ஷிஆஸ்ரிங்க, ஜோகுமாரசாமி, காடுகுதிரே முதலிய நாடகங்களையும் அன்னாதங்கி கரிமயி, சித்தா சூர்யா முதலிய நாவல்கள் மற்றும் சிறுகதை நூல்களையும்

NOT TO BE REPUBLISHED © KTBS

படைத்துள்ளார். 9 கவிதைக் தொகுப்புகள், 21 நாடகங்கள், 14 ஆராய்ச்சிநூல்கள் முதலியன இவரது இலக்கியப்படைப்பு களாகும். பத்மஶ்ரீ, கபீர் விருது, காளிதாஸ் விருது பம்பா விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவர்கள் எல்லோரும் தமது மொழியில் இலக்கியங்கள் படைத்துச் சிறப்புப் பெற்றவர். அவர்களைப் போன்று நாமும் நம்முடைய மொழிக்காக வாழ்ந்து நமது மொழிக்கும், நமது நாட்டிற்கும் சிறப்பு செய்வோம். புகழ்பெற வாழ்வோம் என உறுதி கொள்வோம்.

***ஆசிரியர் குறிப்பு :*** கன்னடக் கண்மணிகள் எழுவர் என்ற நூலை எழுதியவர் காலம் சென்ற புலவர் மு.பசுமலை அரசு என்பவர் ஆவார். இவரது இயற் பெயர் மு. கோவிந்தராசு என்பதாரும். இலக்கிய உலகில் மிக உயர்ந்த பரிசான ஞானபீட ப்பரிசு பெற்ற கன்னட மண்ணின் அறிஞர்களின் சிறப்புக்களை இந்நூலில் தொகுத்து வழங்கி உள்ளார். அண்மையில் விருது பெற்ற (20 -09-2011) சந்திர சேகர கம்பாராவைப் பற்றிய செய்திகள் பிறகு செய்தித் தாள்களிலிருந்து தொகுக்கப்பட்டு இங்கு கொடுக்கப் பட்டுள்ளது. தமிழ் பயிலும் மாணவர்கள் கன்னட அறிஞர்களின் சிறப்புகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**அருஞ்சொற் பொருள்:** விருது - பரிசு, சிறப்பு; ஆசிரமம் - மடம்; போதனை- அறிவுரை; பட்டறிவு - அனுபவ அறிவு;

## பயிற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:-**

1. பாரதிய ஞானபீட அமைப்பு எங்கு எப்பொழுது தொடங்கப் பெற்றது?

©KTBS NOT TO BE REPUBLISHED

2. 1945 - ஆம் ஆண்டிலிருந்து ஞானபீட விருது யாருக்கு வழங்கப்பட்டு வருகிறது?

3. ஞானபீட விருதின் பரிசுத் தொகை எவ்வளவு?

4. ஞானபீடவிருதின் பரிசாக யாருடைய சிலை வழங்கப்படுகிறது?

**ஆ) இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடைதருக:-**

1. எத்தகைய நோக்கங்களுடன் பாரதிய ஞானபீட அமைப்பு தோன்றியது?

2. ஞானபீடவிருது பெற்ற கன்னட அறிஞர்களைக் குறிப்பிடுக

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக:-**

1. குவெம்புவைப் பற்றி குறிப்பு வரைக.

2. அண்மையில் ஞானபீட விருது பெற்ற சந்திரசேகர கம்பராவின் படைப்புக்களை எழுதுக.

**ஈ) கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. _____________________ என்ற கவிதை நூலுக்காக பேந்தரேக்கு ஞானபீட விருது வழங்கப்பட்டது.

2. ___________________ தந்தையெனப் போற்றப் படுகின்றவர் சிவராம காரந்தர்.

3. மாஸ்தி வெங்கடேச ஐயங்காரின் _________________ என்ற நாவலுக்கு ஞானபீட விருது வழங்கப்பட்டது.

**சேர்த்து எழுதுக:-**

தெரு + கூத்து; இலக்கியம் + பணி;

**பிரித்து எழுதுக:-**

நாடகக்கலை, நாட்டுப்புறச்சார்பு

**செயல்முறை:-**

கன்னடக் கவிஞர்களின் படத்தொகுப்பு ஒன்று தயார் செய்க.

©KTBS NOT TO BE REPUBLISHED

V4H7W6

# 7. சிறப்பு (நாடகம்)

- முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

(மற்றவர் விரும்பும் செயலைச் செய்யவேண்டும்; உண்மையாக நடந்து கொள்ள வேண்டும்; வியக்கும்படியான செயல்களைச் செய்ய வேண்டும்: கற்றது போல் நடக்கவேண்டும்; தனித்திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் - இவையெல்லாமே சிறப்பு, புகழ் அடைய வேண்டும் என்று விரும்புவோர் செய்யவேண்டுவன. இவற்றில் ஏதாவதொன்றைச் செய்தாலும் சிறப்பு பெறுவர். முயலை வேட்டையாடியவனை விட யானையை எதிர்த்துப் போரிட்டுத் தோல்வியோடு திரும்பியவனே சிறந்தவன் என்பதை இந்நாடகம் கூறுகிறது.)

## காட்சி 1

## காடு

உறுப்பினர்கள் : வேட்டுவக்குடியான வேடர் தலைவன், காடன், நாகன் முதலியோர். வேடர்கள் கூத்து நடைபெற்று முடிகிறது.

நாகன் : அதோ! தலைவர் வருகிறார்; அமைதியாக இருங்கள்.

காடன் : நாகரே, நம் தலைவர் எதற்காக இவ்வளவு அவசரமாக வருகிறார்?

நாகன் : காலையில் சொல்லியிருந்தார், நம்மெல்லோரையும் சந்திக்க வேண்டுமென்று, வந்துவிட்டார். . . வேடர் தலைவர் வாழ்க!

அனைவரும் : வாழ்க!

வேடர் தலைவன் : வேடர் குலத்தின் வீரர்களே! கோலாகலத்தில் மூழ்கிக் கூத்தாடும் உங்களைக் காணும்போது என் உள்ளமும் ஆனந்தக் கூத்தாடுகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

எனினும் வாய்விட்டு மனதாரச் சிரித்து மகிழக் கூடச் சக்தியில்லாமல் தளர்ச்சி யடைந்து விட்டேன். வயது முதிர்ந்த எனக்கு அயராது வேலை செய்யும் ஆற்றல் குன்றி விட்டது. இனிமேல் உங்களில் ஒருவனைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வதே சிறப்பாகும்.

காடன் : எங்களுக்குள்ளே தலைவரா? ஏன்? தங்களுக்குப் பின் எங்கள் தலைவராய் இருக்க வீரம் செறிந்த இரு மக்களைத் தந்திருக்கிறீர்களே? வழக்கப்படி அவர்களில் ஒருவரே தலைவராக வரவேண்டும்.

தலைவன் : காடரே! வழக்கத்தை நான் மறந்து விடவில்லை என்றாலும் வன விலங்குக ளிடையே கலந்து உறவாடி, வீர வாழ்க்கை நடத்தும் நம் குலத்தினருக்குக் கோழை ஒருவன் வழக்கம் என்ற பெயரால் தலைவனாக வந்து விடக் கூடாது என்பதே என் எண்ணம்.

நாகன் : தலைவரே! தாங்கள் கூறுவதைப் பார்த்தால், தங்கள் வீரப் புதல்வர்களைக் கோழைகள் என்றல்லவா கருதியிருப்பதாகத் தோன்றுகிறது? அப்படித் தங்கள் திருவுள்ளம் நினைத்திருந்தால் அது தவறு என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம். தங்களுக்குப் பின், எங்களுக்குத் தலைவராய் இருக்கும் ஆற்றல் தங்கள் மைந்தர் இருவரிட மும் உள்ளது.

தலைவன் : உங்கள் அனைவருடைய எண்ணமும் அதுவானால் அப்படியே ஆகட்டும். என் மக்கள் இருவரில் தலைமைக்குத் தகுதியுடையவன் எவன்? தெரிந்து கொண்டீர்களா?

காடன் : இருவரும் தகுதியுடையவர்கள் தான். ஆனால் வழக்கப்படி மூத்தவரே தலைமையை ஏற்க வேண்டும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

| | | |
|---|---|---|
| தலைவன் | : | அது கூடாது இருவரில், வீரன் எவனோ, அவனே தலைவனாக வேண்டும். |
| காடன் | : | அதைப் பற்றி எங்களுக்கு இப்போது என்ன கவலை? தங்களுக்குப் பிறகல்லவா அந்தக் கவலை? |
| நாகன் | : | தலைமைக்குத் தகுதியுடையவரை, இப்போதே நமது தலைவர் முன்னே தேர்ந்தெடுத்து விடலாமே? |
| எல்லோரும் | : | ஆம், ஆம், அப்படியே செய்யலாம் |
| தலைவன் | : | எவ்வாறு தேர்ந்தெடுப்பது? |
| நாகன் | : | நமது பரம்பரை வழக்கப்படி அவர்கள் இருவரையும் இன்றே வேட்டைக்கு அனுப்புவோம், வெற்றியோடு வரும் வீரனுக்கே பட்டயம் (பட்டம்) கட்டுவோம். |
| தலைவன் | : | சரி, அப்படியே செய்வோம் பொன்னப் பனையும் சின்னப்பனையும் அழைத்து வாருங்கள். |
| காடன் | : | இதோ, அவர்களே வந்து விட்டார்கள். (பொன்னப்பன், சின்னப்பன் வந்து வணங்குகின்றனர்) |
| இருவரும் | : | அப்பா, வணக்கம் |
| தலைவன் | : | மக்களே! உங்கள் வீரத்தின் உச்சநிலையைக் கண்டறிய எங்களுக்கு இப்போதுஒருவாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எங்கே பார்க்கலாம்; நீங்கள் இருவரும் உங்களுக்குப் பிடித்தமான கருவிகளை இப்போதே எடுத்துக் கொண்டு, தனித்தனியே சென்று வேட்டையாடி, வெற்றியோடு வந்து சேர வேண்டும், தெரியுமா? |
| இருவரும் | : | அப்படியே ஆகட்டும் அப்பா! போய் வருகிறோம். |

NOT TO BE REPUBLISHED ©KTBS

## காட்சி. 2

பொன்னப்பன் குடிசை

| | | |
|---|---|---|
| பொன்னப்பன் | : | வள்ளி! வள்ளி! என் அம்பு எங்கே? |
| வள்ளி | : | அம்பு ஏன்? போரிடப் போகிறீர்களா? |
| பொன் | : | இல்லை கண்ணே! எனது வீர வேட்டையைப் பரீட்சை செய்ய விரும்புகிறார் என் தந்தை. |
| வள்ளி | : | வேடன் மகனுக்கு வேட்டைப் பரீட்சையா? |
| பொன் | : | இதில் என்னோடு போட்டியிடுபவன் தம்பி |
| வள்ளி | : | இருவரில் யார் திறமைஉடையவர்களென்பதை அறிய வேண்டியது தந்தையின் கடமை தானே? |
| வள்ளி | : | தாங்கள் தான் இதில் வெற்றி பெறுவீர்கள் என்று நினைக்கின்றேன். தாங்கள் குறிவைத்த எதுவும் தப்புவதில்லையே! இதோ ஈட்டி. |
| பொன் | : | ஈட்டி! ஈட்டி எதற்கு? வேண்டாம். எனக்குக்கைத் திறனைவிட வில் திறன்தான் அதிகம். ஒரே அம்பில் ஒரு பிராணியைக் கொன்று கொண்டு போய்ச் சேர்க்கிறேன் தந்தையிடம். |
| வள்ளி | : | அப்படியானால் வில்லும் அம்பும் கொண்டு வருகிறேன். |
| பொன் | : | ஆம். கூர்மையான அம்பில் ஒன்றே ஒன்று போதும். மறு அம்பு தேவையில்லை. தந்தையின் கட்டளையும் விருப்பமும் அதுவே. |
| வள்ளி | : | இதோ, ஒரே அம்புதான். எடுத்துச் செல்லுங்கள். வெற்றிச் செய்தியை விரைவினில் வந்து தெரிவியுங்கள். |
| பொன் | : | ஆஹா! ஓடோடியும் வருவேன். |

© KTBS NOT TO BE REPUBLISHED

வள்ளி : அதோ, பாருங்கள்

பொன் : என்ன?

வள்ளி : தங்கள் தம்பி சின்னப்பன் தெற்கு மலைக்காட்டை நோக்கித் தனியாக ஓடுகிறார்.

பொன் : களைத்துப் போய்த் திரும்புவான். ஓடுகிற வன விலங்குகளை ஒரே அம்பால் வீழ்த்த முடியுமா அவனால்?

வள்ளி : கையில் வில்லும் அம்பும் இல்லையே ? வேலை எடுத்துக் கொண்டல்லவா ஓடுகிறார்?

பொன் : வேலை எடுத்துக் கொண்டா ஓடுகிறான்? அதனால் எந்த விலங்கைக்குத்தப் போகிறான்? வீணாக அலைந்து திரும்புவான் பார்.

வள்ளி : ஓடும் விலங்குகளை அம்பு கொண்டு எய்வதுதான் எளிது. அப்படி இருக்க வேலை எடுத்துப் போய் பயன் என்ன? பாவம்! வயதிலும், அனுபவத்திலும் அவர் உங்களுக்குச் சிறியவர்தானே? சென்று வரட்டும்தன் தோல்வியை உணரட்டும்.

பொன் : ஆம்; நான் இரண்டேவிநாடியில் எனது வெற்றி வேட்டையை முடித்துத் திரும்புகிறேன். (போகிறான்).

**காட்சி.3**

காடு

(காட்டிலே குருவிகளின் சப்தமும், யானையின் அலறல் ஒலியும்)

ஒருவன் : ஏய், தம்பி; எங்கே ஓடுகிறாய்?

சின்ன : ஏன்?

NOT TO BE REPUBLISHED © KTBS

ஒருவன் : இப்பொழுதுதான் ஒரு யானை அடிபட்டுக் கதறிக் கொண்டு, இந்தக் காட்டுக்குள் ஓடி வந்தது. அதன் கண்ணில் பட்டால் உன்னைத் தொலைத்து விடும்.

சின் : அதிருக்கட்டும் அந்த யானை எந்தப்பக்கம் போயிற்று?

ஒருவன் : அடே! எந்தப் பக்கம் போனால் என்ன? முதலில் மரத்தின் மீது ஏறு. கொஞ்சம் பொறுத்திருந்து அப்புறம் செல்.

சின்ன : நான் அந்த யானையைக் காணவேண்டும்.

ஒருவன் : காண வேண்டுமா?

சின்ன : ஆம். நான் அதை வேட்டையாட வந்தேன்.

ஒருவன் : என்னப்பா! வேடிக்கையாக இருக்கிறதே நீ சொல்வது! யானை வேட்டைக்குத் தனியாகவா வந்தாய்? கையில் ஒன்று மில்லையே?

சின்ன : கையிலிருந்த வேலை அதன்மீது வீசினேன் அதனோடு ஓடிவிட்ட து யானை.

ஒருவன் : என்ன? நீ எறிந்த வேலா அதன் துதிக்கையில் பாய்ந்திருப்பது?

சின்ன : ஆம். வயிற்றில் பாய்ந்திருந்தால் யானை அங்கேயே வீழ்ந்திருக்கும். குறி சிறிது தவறி, துதிக்கையில் பாய்ந்து விட்டது. இப்போதும் என்ன? எளிதாகச் சென்று வேலைப் பிடுங்கி மறுபடியும் குத்தினால் யானை வீழ்ந்து விடும்.

ஒருவன் : தம்பி! இனி அது முடியாது. புண் பட்ட யானை, புலி போலச் சீற்றம் கொள்ளும். ஓரிடத்திலும் தங்காமல் ஓடிக்கொண் டேயிருக்கும். அதைத் தேடி அலைவது வீண்வேலை.

சின்ன : உங்களோடு இவ்வளவு நேரம் பேசியதுதான் வீண் வேலை. நான் வேகத்தில் ஓடி இருந்தால் அந்த யானையை இதற்குள் பார்த்திருப்பேன். இந்த நேரத்திற்குள் அது எங்கு சென்றதோ தெரியவில்லை?

© KTBS NOT TO BE REPUBLISHED

ஒருவன் : நான்கு காதம் சென்றாலும் அதைக் காண்பது அரிது. ஒரு வேளை திரும்பவும் வழி தவறி இந்தப் பக்கம் வந்தாலும் வரக்கூடும். தேடிப்போ. ஆனால் உன் உயிருக்கு அபாயம் உண்டு. இதில் எச்சரிக்கையாயிரு.

சின்ன : உங்கள் ஆலோசனைக்கு நன்றி. உயிர் தமிழல்ல. இதுவரை யானையின் காலடியைப் பின்பற்றி இங்கு வந்து சேர்ந்தேன். இக்காட்டில் யானையின் காலடி பதியவில்லை. இங்கிருந்து யானை எந்தப் பக்கம் போயிற்று என்பதை மட்டும் சொல்லுங்கள் உதவியாக இருக்கும்.

ஒருவன் : சரியப்பா, சரி! அதோ அந்தத் தேக்குத் தோப்புத் திடலின் பக்கந்தான் ஓடிற்று. போய்ப் பார்.

## காட்சி - 4

### குடிசை

(வேடர் தலைவன் முதலானோர்)

தலைவர் : காடரே! இருவரில் யார் வெற்றி பெறுவர் என்பது உமது எண்ணம்!

காடர் : முதல்வரே வெற்றி பெறுவர் இதிலென்ன தடை? (பொன்னப்பன் முயலைப் பிடித்த வண்ணம் வந்து தந்தையை வணங்குகிறான்)



NOT TO BE REPUBLISHED ©KTBS

பொன் : அப்பா! இதோ இந்த முயல் என்னை ஏமாற்றி விட்டு ஓட எவ்வளவோ முயற்சித்தது. ஒரே அம்பில் வீழ்த்தினேன். பொன்னப்பன் குறிக்குத் தப்ப முடியுமா என்ன?

தலை : (மகிழ்ச்சியோடு தலையைத் தடவிக் கொடுத்து) தம்பி சின்னப்பன் எங்கே?

பொன் : நான் அவனைப் பார்க்கவே இல்லையே! இன்னும் வரவில்லையா?

(சின்னப்பன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு வாடிய முகத்துடன் வருகிறான்)

நாக : இளையவர் ஏன் இப்படி வாடிய முகத்துடன் வருகிறார்?

தலை : சின்னப்பா! என்ன செய்தி?

சின்ன : அப்பா! யானை வேட்டையாட எண்ணி யானைக் காட்டிற்குச் சென்றேன். வேட்டையும் கிடைத்தது. வேலையும் வீசினேன். குறி தவறிப் போய்விட்டது யானையும் பிழைத்து ஓடிவிட்டது. நான் வேலையும் இழந்து விட்டு வெறுங்கையோடு வந்திருக்கிறேன். அப்பா! மன்னிக்க வேண்டும். நான் தோல்வியடைந்து விட்டேன்.

எல் : த்சு .......... ஆஹா!

தலை : (தன் மகனை மார்போடு அணைத்து) மகனே! இதுவா தோல்வி? அல்ல அல்ல! யானை வேட்டைக்கா சென்றாய்? நீயே வீரன்! என் வாழ்நாளிலே நான் ஒரு நாளும் தனியே யானை வேட்டைக்குச் சென்றதில்லை. அவ்வளவு துணிவு எங்களுக்கு ஏற்பட்டதில்லை. செயற்கரிய செய்தாய் நீ! சிறிய செயலில் முனைந்து வெற்றி

©KTBS NOT TO BE REPUBLISHED

பெறுவதை அடைவது சிறப்பு. வேட்டை என்றதும் உள்ளத்தில் உயர்வை எண்ணினாய், பெரியதை எண்ணினாய், முயற்சி செய்தாய். தோல்வியடைந்தாய் என்றாலும் நீயே சிறந்தவன்! நீயே வீரன்.

காட : சின்னப்பன் வீரன் மட்டுமல்ல, தலைவரே! வீரர்களின் தலைவன்.

எல் : ''கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது'' - (குறள் - 772)

**ஆசிரியர் குறிப்பு :**

இந்நாடகத்தை எழுதியவர் முத்தமிழ்க் காவலர் என அழைக்கப்படும் கி. ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் ஆவர். நாவன்மை மிக்க எழுத்தாளர்; மொழிப் போராட்ட வீரர்; நுண்ணறிவு மிக்க எழுத்தாளர்; சிறந்த நாடக ஆசிரியர். இந்நாடகம் திருச்சி, சென்னை போன்ற வானொலி நிலையங்கள் மூலம் ஒலி பரப்பப்பட்டது. தமிழ்ப் பெருமக்களின் உயர்ந்த பண்பாட்டையும், நாகரிகத்தையும் விளக்கும். இந் நாடகம் கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு ஒலிபரப்பப் பட்டுள்ளது.

© KTBS NOT TO BE REPUBLISHED

**அருஞ் சொற் பொருள்:** அவசரம் - விரைவு; ஆனந்தம் - உள்ளக் களிப்பு; கோலா கலம் - விழாக்கோலம்; அயராது - ஓயாது; ஆற்றல் - திறன், சக்தி; குன்றி - குறைந்து; சிறப்பு - உயர்வு; செறிந்த - மிகுந்த; கோழை - பயந்தாங் கொள்ளி; பணிவு - அடக்கம்; உச்சம் - மிகஉயர்ந்த; திறமைசாலி - கெட்டிக்காரன்; வலிமையானவன்; காதம் - 10 கல் தொலைவு (1 கல் - 1மைல் = 1.6 கி.மீ) பாட்டன் - தாத்தா; கானம் - காடு; பிழைத்த - தப்பித்த.

## பயிற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. பொன்னப்பனின் மனைவி பெயர்என்ன?
2. பொன்னப்பன் எந்தத் கருவியை எடுத்துக் கொண்டு வேட்டைக்குச் சென்றான்?

3. சின்னப்பன் எந்தக் கருவியை எடுத்துக் கொண்டு வேட்டைக்குச் சென்றான்?

4. யானை வேட்டைக்குச் சென்றவன் யார்?

5. பொன்னப்பன் எதனை வேட்டையாடிக்கொண்டு வந்தான்?

**ஆ) இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடை தருக:**

1. வேடர் தலைவன் புதிய தலைவனைத் தேர்ந்தெடுக்கக் கூறும் காரணம் என்ன?
2. தலைவனைத் தேர்ந்தெடுக்கப் பயன்பட்ட பழங்கால வழக்கத்தினைக் எழுதுக.
3. தலைவன் தன் மக்களின் வீரத்தைக் கண்டறிய என்ன செய்தான்?
4. புண்பட்ட யானை என்ன செய்யும்?
5. எச்செயல் சிறப்பானது எனத் தலைவன் கூறினான்?

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுக:**

1. பொன்னப்பனும் சின்னப்பனும் எதை வேட்டையாடக் காட்டிற்குள் சென்றனர்? ஏன்?
2. சின்னப்பன் தன் உயிர் தமிழல்ல எனக்கூறக் காரணம் யாது?
3. சின்னப்பன் தன் தோல்வியை என்ன சொல்லி ஒப்புக் கொள் கிறான்?
4. தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வீரன் யார்? எதனால்?

**II அ) இடம் சுட்டி பொருள் விளக்குக:**

1. “ உங்களைக் காணும் போது என் உள்ளமும் ஆனந்தக் கூத்தாடுகிறது ”

NOT TO BE REPUBLISHED @KTBS

2. “ எனது வீர வேட்டையைப் பரீட்சை செய்ய விரும்புகிறார் என் தந்தை”
3. “ தாங்கள் தான் இதில் வெற்றி பெறுவீர்கள் என்று நினைக்கிறேன். ”
4. “ வீணாக அலைந்து திரும்புவான் பார் ”
5. “ குறி சிறிது தவறி, துதிக்கையில் பாய்ந்து விட்டது ”

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. வழக்கப்படி தலைமையை ஏற்கவேண்டியவர் ___________
2. வன விலங்குகளிடையே வீர வாழ்க்கை நடத்துபவர் __________
3. வெற்றியோடு வரும் வீரனுக்கு _________ கட்டப்படும்.
4. வேடர் தலைவனின் மூத்த மகன் _____________

**இ) பொருத்துக:**

| | | |
|---|---|---|
| 1. | பொன்னப்பன் | - இளையவன் |
| 2. | சின்னப்பன் | - மூத்தவன் |
| 3. | வேல் | - பொன்னப்பன் |
| 4. | அம்பு | - சின்னப்பன் |

**III ஆ) சேர்த்து எழுதுக:**

வேண்டும் + என்று
நினைத்து + இருந்தால்
ஆனந்தம் + கூத்து
சக்தி + இல்லாமல்
தலைவராய் + இருக்க
தேர்ந்து + எடுத்து

**ஆ) பிரித்தெழுதுக:**

பாய்ந்திருந்தால்
அதிருக்கட்டும்

NOT TO BE REPUBLISHED @KTBS

மலைக்காடு

தேவையில்லை

தகுதியுடையவன்

**இ) தொடரில் அமைத்து எழுதுக:**

கூர்மை ; திறமைசாலி ; தகுதி;

பரம்பரை; வழக்கம்; வீர வேட்டை.

**படித்துப் பழகுக:**

“ என் உள்ளம் ஆனந்தக் கூத்தாடுகிறது ”

“ கோழை ஒருவன் வழக்கம் என்ற பெயரால் தலைவனாக வந்து விடக்கூடாது. ”

“ வீரன் எவனோ, அவனே தலைவனாக வேண்டும்.”

“ மைந்தர்களின் திறமையை அறிய வேண்டியது தந்தையின் கடமை தானே. ”

**எழுதிப் பழகுக :** உங்கள் பள்ளியில் அல்லது வீட்டில் நடந்த நிகழ்ச்சியை வைத்து, ஒரு நாடகம் எழுதிப் பழகுக.

@KTBS
NOT TO BE REPUBLISHED

J9G6H4

# 8. பாரதி கண்ட தேசிய ஒருமைப்பாடு

**- முனைவர். வ. சுப. மாணிக்கம்**



(இமயம் முதல் குமரிவரை பரந்து விளங்குவது நம் பாரத நாடு. இங்கு வாழும்மக்கள் மொழியாலும் இனத்தாலும் மதத்தாலும் வேறுபட்டவர்கள். ஆயினும் அனைவரும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது).

" எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் "

எனப் பறையறைந்தாற் போல ஒருமைப்பாட்டினை முழக்கியவர் தேசியக் கவி பாரதியார். அவர் பாடிய காலத்தில் பாரத மக்கள் ஒரு குலமாக, ஓரினமாக, ஒரு நிறையாக, ஒரு விலையாக, இந்நாட்டு மன்னராக இருந்ததில்லை. பாரத நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே எல்லாரும் சமம் என்று பாடி முடித்தார் பாரதியார். அவர் கண்ட கனவு இன்றுவரை கனவாகவே இருக்கிறது.

© TBS NOT TO BE REPUBLISHED

தேசிய ஒருமைப்பாட்டினை விடுதலையுரிமை பெறுவதற்காக மட்டும் பாரதி பாடிவிடவில்லை. விடுதலைக்குப் பின்னும் மக்கள் சரிநிகர் சமானமாக ஒத்த மதிப்பு பெற வேண்டும் என்பதுதான் அவர் குறிக்கோள்.

"வாழிகல்வி செல்வமெய்தி மனமகிழ்ந்து கூடியே மனிதர் யாரும் ஒருநிகர் சமானமாக வாழ்வமே " என்று பாடினார்.

**இருவகை விடுதலை:-**

பாரதியார் ஆங்கில ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறப் பாடியதோடு நிற்கவில்லை. சாதிக் கொடுமை, பொருளாதார ஏற்றத் தாழ்வு, சமயப் பிணக்கு, அறியாமை, கல்வியின்மை, ஏய்ப்பு, நயவஞ்சகம், உழைப்பின்மை முதலான பல தீமைகளிலிருந்தும் இந்தியப் பெருநாடும் மக்களும் முழு விடுதலையடைய வேண்டுமென்று பாடினார்.

பாரதி பாடியவற்றுள் ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவது என்பது ஒன்று. அது கிடைத்து விட்டது மற்றொன்று சாதி முதலியவற்றினின்று விடுதலை. அதற்காகவே நாம் பாடுபட்டுக் கொண்டிருக் கிறோம். இந்த விடுதலையைத் தேசிய ஒருமைப்பாடு என்னும் உணர்வினால் தான் பெறமுடியும்.

பாரத சமுதாயம் வாழ்கவே - வாழ்க வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே

எனத் தொடங்கும் பாட்டு, தேசிய ஒருமைப் பாட்டிற்கு ஆணி வேராகும்.

**மொழியொருமை:** இந்தியப் பெருநாட்டில் பல மொழிகள், இனங்கள், மதங்கள் உண்டுஎன்னும் வரலாற்றுண்மையை அறிந்தவர் பாரதியார். இவற்றை நாட்டின் வளங்களாகவும், பிரிவுகளாகவும், பாரதத் தாயின் உறுப்புகளாகவும் மதித்தாரேயன்றி மக்களை வேறு படுத்துவனவாகக் கருதவில்லை.

©KTBS NOT TO BE REPUBLISHED

முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புறம் ஒன்றுடை யாள் இவள்
செப்புமொழி பதினெட்டுடை யாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்!

என்று பாடுவதால் தேசியக் கவிஞர் பாரதியார் இந்தியாவின் பன்மொழி வளத்தைப் பெருமையாகக் கருதுகிறார் என்பது தெளிவாகும்.

**இன ஒருமை:** பாரத ஒருமைப் பாட்டிற்குப் பல மொழிகளை வரவேற்றது போலவே பல இனங்களையும் வரவேற்றும் பாடியுள்ளார் பாரதியார்.

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்

என்பது பாரதியின் மணிக்கொடிப் பாடல். இப்பாடலில் இந்திய இனத்தவரையெல்லாம் பாரத தேவியின் பட்டொளி வீசிப் பறக்கும் கொடியைக் காக்க வாரீர் வாரீர் என அழைக்கிறார். பாரதியார் காணும் தேசிய ஒருமைப்பாடு என்பது நாட்டின் பல மாநிலங்களில் வாழும் பல்வேறு இனத்தவரும் மொழியினவரும் சாதியினரும் நாட்டிற்காக ஒன்றுபடுதல் வேண்டும் என்பதேயாகும்.

**மதவொருமை**

யாரும் பணிந்திடும் தெய்வம் பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக் குள்ளே தெய்வம் ஒன்று - இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்

என மதங்களுக்குள் ஒருமைப்பாடு காட்டியவர் பாரதியார். இவ்வாறு மொழி ஒருமைப்பாடு, இன ஒருமைப்பாடு, மத ஒருமைப்பாடு வேண்டும் என்று வற்புறுத்தியவர் பாரதியார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே''

என்கிறார். எல்லாரும் இந்தியர் என்ற நிலையில் ஒன்று பட்டால் தான் வாழ்வு. இல்லையேல் எல்லார்க்கும் தாழ்வே என்பது மகாகவி பாரதி விடுக்கும் எச்சரிக்கையாகும்.

***ஆசிரியர் குறிப்பு :*** டாக்டர் வ.சுப.மாணிக்கம் புதுக்கோட்டை மாவட்டம் மேலைச் சிவபுரியில் 13.3.1917 அன்று பிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்று பட்டம் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் காரைக்குடி அழகப்பா கல்லூரி முதல்வராகவும் பணி புரிந்தார். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்துணை வேந்தராகப் பணியாற்றியவர். பழந்தமிழ்க் கொள்கையில் உறுதியுடையவர்.

***அருஞ்சொற் பொருள்:*** நிறை - அளவு, பிணக்கு - மாறுபாடு, தாதர் - அடிமையர், மொய்ம்பு - வலிமை

## பயிற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. பாரதியின் குறிக்கோள் யாது?
2. பாரதி விரும்பியவற்றுள் எந்த விடுதலை கிடைத்துள்ளது?
3. தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஆணிவேராகும் பகுதி எது?
4. பட்டொளி வீசிப் பறப்பது எது?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை எழுதுக:**

1. பாரதியார் பாடிய காலத்தில் மக்கள் எவ்வாறு இருந்தனர்?

NOT TO BE REPUBLISHED ©KTBS

2. இந்தியப் பெருநாடு எவற்றிலிருந்து முழுவிடுதலை பெற வேண்டும் என்கிறார் பாரதியார்?

3. மக்களை வேறுபடுத்துவனவாகப் பாரதியார் எதனைக் கருதவில்லை?

4. பாரதியார் காணும் தேசிய ஒருமைப்பாடு என்பது எது?

5. பாரதியார் எவற்றை வலியுறுத்திப் பாடுகிறார்?

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுக:**

1. பாரதி கண்ட கனவினை விளக்குக
2. பாரதியார் இந்தியாவின் பன்மொழி வளத்தை எவ்வாறு பெருமையாகக் கருதுகிறார்?

**II அ) கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. மக்கள் ஒற்றுமைக்கு இடையூறாய் இருப்பது ______________
2. செப்பு மொழி ___________ உடையாள்
3. பாருக்குள்ளே தெய்வம் ______________
4. ஒன்று பட்டால் தான் ______________

**ஆ) சேர்த்தெழுதுக:-** வரவு + ஏற்று, பன்மை + மொழி

**இ) பிரித்தெழுதுக :-** பறையறை, நிறைவுற

**ஈ) எதிர்ச் சொல் தருக:-** தீமை, அறியாமை, வாழ்வு.

**செய்முறை:**

பாரதியாரின் தேசபக்தி பாடல்களுள் ஏதேனும் இரண்டு எழுதி வருக.

NOT TO BE REPUBLISHED @KTBS

# 9. தருக்கு அடங்கிய எழுத்தர்

**- உ.வே. சாமிநாத ஐயர்**

P7R3U4

(டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் தமது ஆசிரியரான திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் ஆழ்ந்த பக்தி உடையவர். தம்முடைய எழுத்துகளில் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய தமிழ்ப் புலமையையும் கவிதை பொழியும் திறனையும் பல இடங்களில் குறிப்பிடுகிறார். செருக்குடன் இருந்த எழுத்தர் ஒருவர் தன் எண்ணம் மாறி, பிள்ளையவர்களின் புலமையை உணர்ந்த செயலை ஆசிரியர் இக்கட்டுரையில் எடுத்துரைத்துள்ளார்).

மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருநாகைக் காரோணப்புராணம் இயற்றி வருகையில் அதனை எழுதி வந்தவர் முத்தாம்பாள்புரம் கோபால் பிள்ளை என்பவர். நல்ல இயற்கை அறிவுடையவர். பனையேட்டில் எழுதுவதில் இவருக்கு மிக்க ஆற்றல் உண்டு. இயல்பாகவே எழுதும் வன்மை நமக்கு அதிகம் என்று இவர் எண்ணியிருந்தார்.

அப்படி யிருக்கையில் ஒருநாள் பிள்ளையவரிடத்தில் மிக்க அன்புடையவராகிய வைத்தியலிங்கம் பிள்ளை என்பவர், அவர் படுத்திருக்கையில், மாணாக்கர் கூட்டத்திலிருந்து பேசிக் கொண்டிருந்தார். கோபால பிள்ளையை விரைவாக எழுதுவதில் சமர்த்தர் என்று பாராட்டினார். அதனைக் கேட்ட கோபால பிள்ளை; எல்லாம் சரிதான் ஐயா அவர்கள் என்னுடைய கை வலிக்கும் படி பாடல் சொல்கிறார்களில்லையே என்று விடை பகர்ந்தார். அந்தச் சமயம் இவர் எவ்வளவோ மெல்லப் பேசியும் சயனம் செய்திருந்த பிள்ளையவர்களுடைய காதில் இவருடைய சொல் விழுந்தது. உடனே எழுந்து வந்தால், தாம் சொல்லியதைக் குறித்துக் கோபால பிள்ளை நாணமும் அச்சமும் அடைவாரென்று நினைத்துச் சிறிது நேரம் படுக்கையிலேயே அவர் படுத்திருந்து விட்டு அப்பால் எழுந்து வந்தார்; பாடஞ்சொல்லுதல், நூல் எழுதுவித்தல் முதலியன வழக்கம் போல் நடை பெற்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED

பின்பு ஒருநாள் காலையில் வழக்கப்படியே அனுஷ்டானத்தை முடித்துக் கொண்டு பிள்ளையவர்கள் சாய்வு நாற்காலியில் வந்து அமர்ந்தனர். எழுத வேண்டிய ஏடும் கையுமாகக் கோபால பிள்ளை வந்தார்; இவருடன் வேறு சில மாணாக்கர்களும் செய்யுள் செய்வதைக் கவனிக்கும் அன்பர்களும் வந்து வேறு வேறிடத்தில், இருந்து வழக்கப்படியே கவனித்து வந்தார்கள். அக்கவிஞர்பிரான் அப்புராணத்தில் மேலே நடக்க வேண்டிய பகுதியின் வசனத்தைப் படிக்கச் சொல்லக் கேட்டுவிட்டு உடனே செய்யுள் செய்யத் தொடங்காமல் ஒரு நாழிகைவரையில் யோசனை செய்து விட்டுப் பாடல் சொல்ல ஆரம்பித்தார்.

ஆரம்பித்த அவர் ஓய்வின்றிச் சொல்லிக் கொண்டே சென்றார். அன்று நடந்த பகுதி மேலே சொன்ன புராணத்தில் சுந்தர விடங்கப் படலம். அது கற்பனை நிரம்பிய பாகம். எழுதினவரும் கையோயாமல் எழுதிக் கொண்டே சென்றார். தொடங்கிய காலம் காலை 7 மணி; 10 மணி வரையில் சொல்லிக் கொண்டு வருவதும் அதற்கு மேலே பூஜை செய்வதற்கு எழுந்து ஸ்நானத்திற்குப் போய் விடுவதும் அவருக்கு வழக்கம். மிக விரைவாக அவர் செய்யுட்களைச் சொல்லிக் கொண்டே சென்றமையால் எழுதுபவராகிய கோபால பிள்ளைக்குக் கையில் நோவுண்டாயிற்று. “எப்பொழுது பத்து மணியாகும்” என்று எதிர்பார்த்திருந்தார். 10 மணியாகியும் ஸ்நானத்திற்கு எழாமல் அவர் பாடல்களை மேலே சொல்லிக் கொண்டே போனார்.

அப்பொழுது தவசிப்பிள்ளை வந்து ஸ்நானத்திற்கு எழவேண்டும் என்று குறிப்பித்தான். சரியென்று சொல்லி விட்டு எழாமல் மேலும் செய்யுட்களை அவர் சொல்லிக் கொண்டே வந்தார். மணி பதினொன்றும் ஆகிவிட்டது. கோபால பிள்ளைக்கு வலக்கைச் சுண்டு விரலின் பின்புறத்திலும் இடக்கைக் கட்டை விரலின் நுனியிலும் ரத்தம் குழம்பி விட்டது. வலி அதிகமாயிற்று; இவரால் வலி பொறுக்க முடியவில்லை. தம்முடைய கஷ்டத்தை ஒருவாறு புலப்படுத்தினால், நிறுத்துவாரென்று நினைத்து ஏட்டைக் கீழே வைத்து விட்டு இடக்கையை வலக்கையாலும் வலக்கையை

NOT TO BE REPUBLISHED ©KTBS

இடக்கையாலும் தடவிக் கொண்டும் பிடித்துக் கொண்டும் குறிப்பாகத் தம்முடைய கஷ்டத்தை ஒருவாறு புலப்படுத்தினார். கவிஞர் சிறிதும் கவனியாதது போல் பாடல்களைச் சொல்லிக் கொண்டே சென்றார். மணி பதினொன்றரை ஆகிவிட்டது. கோபாலபிள்ளையோ வாய்விட்டுக் கூறுவதற்கு நாணிப் பல்லைக் கடித்துக் கொண்டே எழுதிவந்தார். பக்கத்தில் இருந்த மாணாக்கர்களில் அநேகர் பதினோரு மணிக்கே எழுந்து சென்று விட்டார்கள். அப்புலவர் சிகாமணியோ, செய்யுள் சொல்லி வருவதை நிறுத்தவேயில்லை. மணி பன்னிரண்டு ஆயிற்று. அதன் பிறகு சிறிதளவேனும் தம்மால் எழுதமுடியாதென்று உணர்ந்த கோபாலபிள்ளை, ஆசிரியர் சற்று யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் திடீரென எழுந்து கையிலே உள்ள ஏடுகளையெல்லாம் சேர்த்து ஒரு கயிற்றால் கட்டி எழுத்தாணியை உறையில் செருகிவிட்டு எல்லாவற்றையும் அவருக்கு முன்னே வைத்துச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி எழாமலே கிடந்தார். அவர் இவரைப் பார்த்து விட்டு, தம்பி! ஏன் இப்படி? என்ன செய்தி? எழுந்திரு” என்றார்.

கோபால் : இனி என்னால் எழுதவே முடியாது என்னைப் போல் எழுதுகிறவர்கள் யாருமில்லை என்றிருந்த எண்ணம் எனக்கு அடியோடு இன்று நீங்கிவிட்டது. இது கிடக்க, ஐயா அவர்களுடைய பெருமையை இன்றுதான் உண்மையில் அறிந்து கொண்டேன். தேவரீர்! எந்தத் தெய்வத்தின் அவதாரமோ, எந்தப் பெரியோர்களுடைய அம்சமோ யான் அறியேன்! இவ்வாறு செய்யுள் செய்யும் ஆற்றலை யாரிடத்தும் நான் கண்டிலேன்; கேட்டுமிலேன். இன்றைக்கு நடந்த பாகம் சாதாரணமானதன்றே! இதனை வேறு கவிஞர்கள் செய்வதாக இருந்தால் எத்தனையோ நாள் பிடிக்குமே. அது யாதொரு வருத்தமுமின்றி விரைவாகப் பாடப்பட்டதே? இனி இந்தப் பணியை அடியேன் பலநாள் சென்ற பிறகுதான் செய்ய முடியுமென்று தோன்றுகிறது. இடையிலே நிறுத்திவிட்டேனென்று கோபித்துக் கொள்ளக்கூடாது.



@KTBS NOT TO BE REPUBLISHED

***மீனாட்சி:***"என்ன அப்பா! உனக்குச் சிரமமாயிருக்கிறதென்று முன்னமே தெரிவித்திருந்தால் நான் நிறுத்தியிருப்பேன். இது மிகவும் சிறந்த பகுதியாக இருந்ததனால் மத்தியில் நிறுத்த மனம் வரவில்லை. முன்பே மனதிற் செய்துகொண்ட ஒழுங்கு பின்பு தவறிவிடுமேயென்று நினைந்து சொல்லி வந்தேன். நீ ஸ்நானம் செய்து கொண்டு வரலாம்" என்று இவரை அனுப்பி விட்டுத்தாமும் நீராடப் போய்விட்டார். பக்கத்திலிருந்த சிலரால் இச்செய்தி மாயூரத்திலும் அயலூர்களிலும் பரவலாயிற்று. கேட்ட யாவரும் விம்மிதமுற்று வந்து வந்து பிள்ளையவர்களைப் பாராட்டி விட்டுச் செல்வாராயினர்.

முகம் வாடி மிகுந்த சோர்வோடு கோபால பிள்ளை அங்கே இருந்தனர். பிற்பகலில் வந்த வைத்தியலிங்கம் பிள்ளை இவரை நோக்கி ''ஏன் இப்படி இருக்கிறீர்?'' என்று கேட்டு நிகழ்ந்தவற்றை அயலாரால் தெரிந்து கொண்டு இவரைப் பார்த்து, "என்ன உம்முடைய கொட்டம் இன்றைக்கு அடங்கிற்றாமே. கையில் வலியுண்டாகும்படி ஐயா அவர்கள் பாடல் சொல்கிறார் களில்லையே என்று அன்றைக்குச் சொன்னீரே! அன்றைய தினம் நீர் சொன்னது எனக்கும் மிக்க வருத்தந்தான். ''துள்ளின மாடு பொதி சுமக்கும்!'' என்று சொன்னார். அந்தச் சமயம் அங்கே வந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் "தம்பி, அவனை ஒன்றும் சொல்ல வேண்டாம் அவன் நல்ல பிள்ளை; மிகவும் வருந்துவான்!" என்று சொல்லி அவரை அடக்கினார். அப்பால் கோபால பிள்ளையின் கைவலி தீரப் பல நாட்கள் சென்றன.

இயல்பாகவே பிள்ளையவர்களிடத்தில் பக்தியுள்ளவராக இருந்த கோபால பிள்ளைக்கு இந்த நிகழ்ச்சிக்குப்பின் அவர்பால் அளவிறந்த மதிப்புண்டாயிற்று.

**ஆசிரியர் குறிப்பு :** டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் தலை சிறந்த மாணாக்கர்களுள் ஒருவர் - இவர் பழந்தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பித்துத் தமிழிலக்கியத்திற்கு அருந் தொண்டாற்றியவர். தமிழ்த்தாத்தா என்று

NOT TO BE REPUBLISHED @KTBS

அனைவராலும் அழைக்கப்பட்டவர். இக் கட்டுரை அவரின் பழையதும் புதியதும் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

**அருஞ்சொற் பொருள் :** திரு நாகைக் காரோணம் - நாகப் பட்டினத்தில் அமைந்துள்ள சிவத்தலம். புராணம் - பழைய வரலாறு ( பழங்கதை), சமர்த்தர் - வல்லவர், அனுஷ்டானம் - அன்றாடக் கடமைகள், நாழிகை - 24 நிமிடங்கள், ஏடு - எழுதப்பயன் படுத்தும். பனை ஓலை, தவசிப்பிள்ளை - சமையல்காரர், சாஷ்டாங்கம் - எட்டு உறுப்புக்கள் தரையில் படிய வணங்குதல், பொதி - மூட்டை.

## பயிற்சி

**I அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய புராணம் எது?
2. வைத்தியலிங்கம் பிள்ளை கோபால் பிள்ளையைப் பாராட்டிக் கூறியது யாது?
3. கோபால பிள்ளைக்குக் கையில் ஏன் நோவுண்டாயிற்று?
4. தவசிப் பிள்ளை குறிப்பால் என்ன கூறினான்?
5. கோபால் பிள்ளை தன் துன்பத்தை எவ்வாறு புலப்படுத்தினார்?
6. கோபால பிள்ளையவர்களுக்கு அடியோடு நீங்கிய எண்ணம் யாது?

**ஆ) மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை எழுதுக:**

1. கோபால் பிள்ளை எதில் வல்லவர்?
2. மீனாட்சி சுந்தரம் பிள்ளை சிறிது நேரம் படுக்கையிலேயே ஏன் படுத்திருந்தார்?
3. மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடல் சொல்லும் காலத்தில் அவர் வழக்கம் யாது?
4. தம்மால் எழுத முடியாது என்று உணர்ந்த கோபால பிள்ளை திடீரென எழுந்து என்ன செய்தார்?

© KTBS NOT TO BE REPUBLISHED

5. கோபால் பிள்ளை மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பெருமைகளாகக் கூறுவன யாவை?
6. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தான் நிறுத்தாமல் பாடல் கூறியதற்கு என்ன காரணம் கூறுகிறார்?

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுக:**

1. கோபால் பிள்ளை அடைந்த துன்பம் யாது?
2. என்னால் எழுதவே முடியாது என்று கோபாலபிள்ளை கூறக் காரணம் என்ன?
3. நிகழ்ந்தவற்றை அறிந்த வைத்தியலிங்கம் பிள்ளை கோபால பிள்ளையை நோக்கிக் கூறுவன யாவை?

**II அ) இடம் சுட்டி பொருள் விளக்குக:**

1. "என்னுடைய கை வலிக்கும்படி பாடல் சொல் கிறார்களில்லையே"
2. "எப்பொழுது பத்து மணியாகும்?"
3. "தம்பி, ஏன் இப்படி? என்ன செய்தி?"
4. "தேவரீர், எந்த தெய்வத்தின் அவதாரமோ?"
5. "துள்ளின மாடு பொதி சுமக்கும்"

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. கோபால பிள்ளைக்கு ________________ எழுதுவதில் மிக்க ஆற்றல் உண்டு.
2. ____________ வந்து ஸ்நானத்திற்கு எழ வேண்டும் என்று குறிப்பித்தான்.
3. என்ன உம்முடைய _____________ இன்றைக்கு அடங்கிற்றாமே?

**III அ) சேர்த்தெழுதுக:**

தருக்கு + அடங்கிய, வலம் + கை, கண்டு + இலேன்.

**ஆ) பிரித்தெழுதுக :** கையோயாமல், எழுத்தாணி, அயலூர்

**இ) எதிர்ச்சொல் தருக:** விரைவாக, பெருமை, உண்மை.

## 10. அறிவியல் உங்களுக்காக

- நெல்லை சு.முத்து



(அறிவியல் என்றதும் ஏதே ஒரு புரியாத பாடம் என்கிற மாதிரி அந்நியப்படுத்தும் மனப்பான்மை நமக்குள் சிலருக்கு எழுவதுண்டு. உண்மையில் அறிவியல் இனிது. வாழ்வின் அன்றாட நடைமுறை அனுபவங்களிலிருந்து பெறப்படும் விளக்கங்களின் முறையான தொகுப்பே அறிவியல்.)

உணர்வய அறிவியலுக்கும், பொருள்வயத் தொழில் நுட்பத்திற்கும் அப்பால் எதுவுமில்லை.

அறிவியல் மனித இனத்துக்காகவே! அறிவியல் சிந்தனைகள் மானிட அக வளர்ச்சிக்கும் தொழில் நுட்பவெளிப்பாடுகள் வாழ்வியல் புற வசதிக்குமாகவே எழுந்தன.

அறிவியல், தொழில் நுட்பம் இரண்டுமே சரி விகிதக் நிலையில் சிறுவர் முதல் முதியோர் வரை, பாமரர் முதல் பட்டதாரிகள் வரை அனைவரையும் சென்றடைய வேண்டும்.



© KTBS NOT TO BE REPUBLISHED

அறிவியல் என்பது வெறும் விஞ்ஞானப் புத்தகங்களிலிருந்து பெறப்படுவது மட்டும் அன்று. அது நம்மைச் சுற்றி உள்ள சூழலிலிருந்தே உருப்பெறுகிறது.

"தினையளவு போதாச் சிறுபுல் நீர் நீண்ட பனையளவு காட்டும்" என்று பாடிய புலவன் கபிலன். இவ்வடியில் புலவன், பனித்துளிக்குள் பனை மரத்தைக் கண்டான்.

இயற்கையில் இந்த வினோதச் சூழலிலிருந்து தோன்றியது தானே ஒளி வில்லை (Lens) பற்றிய தொழில் நுட்பம்.

பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் அறிவியல் சிந்தனை தொழில் நுட்பமாகப் பரிணமிப்பதே இவ்வாறு தான்.

**அறிவியல் விழிப்புணர்வு:-**

மக்களிடையே அறிவியல் விழிப்புணர்வு எழ வேண்டும். முன்னேறி வரும் விண்வெளி யுகத்தில் கண்மூடித்தனமான மூட நம்பிக்கைகள் அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

இன்றைக்கும் பிணம் பிசாசு என்றதும் பலர் கிலி கொண்டு நடுங்குவது கண்டு நகைக்கத் தோன்றுகிறது. சுடுகாட்டினில் எரிகிற பிணங்கள் சிதை விட்டு எழுவதைக் "கொள்ளி வாய்ப் பிசாசு" என்று வர்ணிப்பவரும் உண்டு. உண்மையில் எரிகிற பிணம் எழுமா? என்றால் எழும். ஆனால் உயிரோடு எழுவது இல்லை. எலும்பிலுள்ள பாஸ்பரம் என்றும் தனிமம் ஹைடிரஜன் என்னும் வளிமத்துடன் கூடி உருவான பாஸ்பீன் (Phosphine) எலும்புக்குள் முறுகித் திரண்டு புடைத்து வெளிப்படும். அந்த விறைப்பில் பிணம் எழுந்திருக்கத் தான் செய்யும். இப்படிச் சிதை விட்டெழும் எலும்புக் கூட்டையே நாட்டுப் புறங்களில் கொள்ளி வாய்ப் பிசாசு என்கின்றனர். பிணம் காக்கும் வெட்டியான் இந்தப் பிசாசை அவ்வப்போது கம்பால் தட்டிக் கிடத்தி விடுவான்.

அறிவியல் உண்மைகளைத் தெரிந்து கொண்டால் தேவையற்ற மூட நம்பிக்கைகள் நம்மை விட்டு அகலும். இது உறுதி. சாதி, மதம், மொழி, இன, நிற பேதங்களையும் அகற்றி விடும் அறிவியல் என்பது திண்ணம்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**நடைமுறையில் அறிவியல்:**

பொதுவாக, வெளுத்த நிறமுடையவர் கறுத்த நிறமுடையவரைக் கொஞ்சம் ஏளனமாகப் பார்க்கிறார்கள் இல்லையெனினும் கறுப்பு நிறத்தவர் தங்களைத் தாங்களே அழகில்லாதவர் என்கிற தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொண்டுள்ளனர். உண்மையில் கறுப்பு அறிவியல் ரீதியில் கவசமிடும் அழகாகும்.

சூரிய ஒளிக் கற்றையிலுள்ள உடலுக்குத் தீங்கான புற ஊதாக் கதிர்களைத் (Ultra Violet rays) தடுத்து மேனியைக் காப்பது கறுப்புத் தோலே. இதிலுள்ள மெலானின் (Melanine) என்னும் நிறமி புற ஊதாக் கதிர் உறிஞ்சியாகும். கறுத்த தலைமுடியில் அடங்கியிருப்பதும் இந்த மெலானின் நிறமிதான்.

இந்த வண்ண வேதியல் குறித்துச் சற்று அதிகமாகச் சிந்திப்போம்.

மருதோன்றிச் சிவப்பு அனைவருக்கும் பிடிக்கும் பச்சை நிறத்திலிருக்கும் மருதோன்றி இலையை அரைத்து உள்ளங்கையிலும் பாதத்திலும் விரல்களிலும் பூசிக் கொள்கிறோம்.

அது காய்ந்த பிறகு தோலில் படியும் இளஞ்சிவப்புக் கோலத்தினை யாவரும் ரசிப்பர். இந்தச் சிவப்பிற்குக் காரணம் மருதோன்றி இலையில் அடங்கியுள்ள அந்தோசயனின் (Anthocyanine) என்னும் நிறமியே. அவ்வாறே தாவரத்தின் பச்சை நிறத்திற்கு மக்னீசியக் கரிமச் சேர்மமான குளோரோபில் (cholorophyll) என்கிற பச்சயம் காரணம். இலைகளின் பழுப்பு நிறத்திற்கோ 'சேந்தோபில்' (Xanthophyll) என்னும் நிறமியே காரணம்.

நிறங்கள் மட்டுமல்ல ஒவ்வொரு விதச் சுவைக்கும் வெவ்வேறு வேதிமங்களே காரணம்.

© KTBS NOT TO BE REPUBLISHED

கரும்பின் இனிப்புக்குக் காரணம் அதிலடங்கிய சுக்ரோஸ் (Sucrose) ஆகும். பாலின் சுவை அதன் லாக்டோஸ் (Lactose) எனும் மாவுப் பொருளில் உள்ளது, தேனில் பிரக்டோஸ் (Fructose) உள்ளது. இளநீரில் மானோஸ் (Mannose) உள்ளது. வாழைப் பழத்தில் பெக்டின் (Pectin) உள்ளது. இப்படி இனிப்புச் சுவைக்குச் சர்க்கரைப் பொருள்களே காரணம்.

எலுமிச்சையின் புளிப்பு, அதிலுள்ள சிட்ரிக் அமிலத்தில் (Citric Acid) உள்ளது. தக்காளியில் ஆக்ஸாலின் அமிலம் (Oxalin Acid) உள்ளது. தயிரில் லாக்டிக் அமிலம் (Lactic Acid) உள்ளது. நெல்லிக் கனியில் அஸ்கார்பிக் அமிலம் (Ascorbic Acid) உள்ளது. ஆப்பிளில் மூலீக் அமிலம் (Maleic Acid) உள்ளது.

அமிலங்கள் புளிப்பு சுவை தரும் காரங்களோ உறைக்கும். பச்சை மிளகாயின் காரச் சுவைக்கு அதில் அடங்கியுள்ள காப்சய்ஸின் (Capsaisin) என்னும் வேதிமமே காரணம்.

சமையல் கட்டில் வெங்காயம் நறுக்கும்போது உங்கள் கண்களில் கண்ணீர் வழிகிறது. அதற்குக் காரணம் ஒரு வகைக் கந்தக வேதிமப் பொருளே.

வெங்காயத்தினை அரியும் பொழுது அதில் அடங்கியுள்ள புரோப்பீன் சிஸ்டின் சல்பாக்சைடு (Propene Cystin Sulphoxide), அல்லினேஸ் (Allinase) சேர்ந்த நொதியினால் புரோப்பீன் கந்தக அமிலமாக (Propene Sulphenic Acid) உருமாறும். இதிலிருந்து வெளிப்படும் புரோப்பேன்தயோல் ஆக்சைடு (Propanethiol oxide) ஆவியே உங்களைக் கண்கலங்கச் செய்கிறது.

அதே அமிலத்தின் மற்றொரு வேதிப்பொருள் தயோ சல்பீனேட் (Thiol Sulphinate) இந்தக் கந்தகச் சேர்மம் மூச்சிரைப்பு ஆஸ்த்துமா நோய்க்கு நல்ல நிவாரணி என்று ஜெர்மன் அறிஞர் தாமஸ் பேயர் (Thomas Bayer) கண்டு அறிவித்திருக்கிறார். ஜீவிபெளான் (Jwiebelan) என்ற ஒரு மருந்துக்கு ஜெர்மன் மொழியில் வெங்காயம் என்பதே பொருள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

இப்படி எத்தனையோ அறிவியல் உண்மைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கூற வந்த செய்தி இதுதான். அறிவியலில் பெயர்ச் சொற்களைப் படித்துப் பிரமித்து விலகி ஓட வேண்டாம். ஏனென்றால் அறிவியல் என்பதே நடைமுறை அனுபவங்களின் வெளிப்பாடு தான்.

**ஆசிரியர் குறிப்பு :** இக்கட்டுரை நெல்லை சு. முத்து என்ற அறிவியல் ஆர்வலரால் எழுதப்பட்டது. பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே அறிவியல் விழிப்புணர்வு ஊட்டும் வகையில் உரைகள் நிகழ்த்தி வருகிறார். தம் 31 ஆண்டுக்கால விண்வெளி ஆய்வுப்பணியில் 65 நூல்களை எழுதியுள்ளார்; 25 முறை பரிசுகள் பெற்று உள்ளார். இக்கட்டுரை 1993 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் வானொலியில் நெல்லை சு. முத்து அவர்கள் ஆற்றிய உரையாகும்.

**அருஞ் சொற்பொருள் :** மனப்பான்மை - எண்ணம்; பாமரன் - படிக்காதவன்; வினோதம் - புதுமை; பரிணமிப்பது - வளர்வது, சிதை - பிணத்தை எரிக்கும் விறகு; வளி - காற்று; திண்ணம் - உறுதி; வேதிமம் - இரசாயனப்பொருள்; நொதி - வேதிக் கலவை (இரசாயனக் கலவை); நிவாரணி - மருந்து.

**கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. பண்டைய புலவன் ________________ பனைமரத்தைக் கண்டான்
2. விண்வெளி யுகத்தில் கண்மூடித் தனமான _____________ அறவே ஒழிக்கப் படவும் வேண்டும்.
3. கறுத்த தலைமுடியில் அடங்கியிருப்பதும் இந்த ______________நிறமிதான்.
4. மிளகாயின் காரச் சுவைக்கு _________________ எனும் வேதிமமே காரணம்.

© KTBS NOT TO BE REPUBLISHED

I **அ) ஓரிரு தொடர்களில் விடை தருக:**

1. அறிவியல் என்றவுடன் நமக்குள் எழுகின்ற மனப்பான்மை யாது?
2. மனிதன் எதைக் கண்டு விமானம் படைத்தான்?
3. மக்களிடையே எந்த விழிப்புணர்வு எழ வேண்டும்?
4. எதைக் கொள்ளிவாய்ப் பிசாசு என வருணிக்கின்றனர்?
5. மூடநம்பிக்கை நம்மை விட்டு எப்போது அகலும்?
6. வெங்காயம் உரிக்கும் போது கண்களில் இருந்து கண்ணீர் வரக்காரணம் என்ன?
7. மூச்சிரைப்பு நோய்க்கு நல்ல நிவாரணி எது?

**ஆ) இரண்டு அல்லது மூன்று தொடர்களில் விடை எழுதுக:**

1. அறிவியல் வளர்ச்சி எதற்காக எழுந்தது?
2. கறுப்பு மேனி பற்றி அறிவியல் கூறுவது என்ன?
3. ஜெர்மன் அறிஞன் தாமஸ் பேயர் கண்டு அறிவித்த செய்தி யாது?
4. கொள்ளிவாய்ப் பிசாசு பற்றி எழுதுக.
5. ஜீவிபெலான் பற்றி எழுதுக.

**இ) ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை எழுதுக:-**

1. அறிவியலும் தொழில் நுட்பமும் பற்றி விளக்குக.
2. வேதியல் கூறும் நிறங்கள் பற்றிய செய்திகளை எழுதுக.
3. சுவைகள் மாறுபடும் காரணங்கள் பற்றி இக்கட்டுரை கூறும் கருத்துக்களை எழுதுக.

II **அ) இடஞ் சுட்டி பொருள் விளக்குக:-**

1. " உணர்வய அறிவியலுக்கும், பொருள்வயத் தொழில் நுட்பத்திற்கும் அப்பால் எதுவுமில்லை."
2. "அறிவியல் என்பது வெறும் விஞ்ஞானப் புத்தகங்களில் இருந்து பெறப்படுவது மட்டும் அன்று"

© KTBS NOT TO BE REPUBLISHED

3. “ கண்மூடித்தனமான மூடநம்பிக்கைகள் அறவே ஒழிக்கப்படவேண்டும்”

4. “ சிதை விட்டெழும் எலும்புக் கூட்டையே நாட்டுப் புறங்களில் கொள்ளிவாய்ப் பிசாசு என்கின்றனர்?”

5. “ கறுத்த தலைமுடியில் அடங்கியிருப்பதும் இந்த மெலானின் நிறமிதான்”

6. “ ஒவ்வொரு விதச் சுவைக்கும் வெவ்வேறு வேதிமங்களே காரணம்”

7.“ இந்தக் கந்தகச் சேர்மம் மூச்சிரைப்பு ஆஸ்த்துமா நோய்க்கு நல்ல நிவாரணி”

III அ) சேர்த்து எழுதுக:-

சுற்றி + உள்ள = நிறம் + உடையவர் =
அடங்கி + உள்ள = பனை + அளவு =

ஆ) பிரித்தெழுதுக:-

எழுதுவதுண்டு : அழகில்லாதவர்; அறிவியல்; கலங்கச் செய்கிறது; விழிப்புணர்வு

பொருத்துக:

அறிவியல் - தனிமம், பாஸ்பரம் - இனிது, ஹைடிரஜன் - புளிப்பு,அமிலம் - வளிமம்

IV கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. வாழ்வின் அன்றாட நடைமுறை அனுபவங்களிலிருந்து பெறப்படும் விளக்கங்களின் முறையான தொகுப்பே _______________.

2. _______________ கண்டான் விமானம் படைத்தான்.

3. அமிலங்கள் ____________________ சுவை உடையவை.

செய்முறை :

புதுமையான/விந்தையான அறிவியல் செய்திகளை தொகுத்து ஒரு படத்தொகுப்பு தயார் செய்க.

@KTBS NOT TO BE REPUBLISHED

## இலக்கணம்

### 6. இடம்

ஒரு செயலைச் செய்பவனைத் தன்மை எனவும், அவன் முன்னே உள்ளவனை முன்னிலை எனவும், அவ்விருவர் அல்லாத மூன்றாமவனைக் குறித்தலைப் படர்க்கை எனவும் கூறுவர்.

(எ.டு) நான், நாங்கள், நாம் - தன்மை
நீ, நீங்கள், நீவிர் - முன்னிலை
அவன், அவள், அது, அவர்கள், அவை - படர்க்கை

### 7. காலம்

ஒரு செயலைச் செய்யும் காலத்தைக் குறிப்பது காலம் எனப்படும். அது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும்.

(எ.டு) செய்தான், படித்தான் - இறந்த காலம்
செய்கிறான், படிக்கிறான் - நிகழ்காலம்
செய்வான், படிப்பான் - எதிர்காலம்

**வினாக்கள்:-**

1. சொல் என்றால் என்ன?
2. சொல்லின் வகைகள் யாவை? விளக்குக.
3. பகு பதம், பகாப் பதம் என்றால் என்ன? விளக்குக.
4. சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. பெயர்ச் சொல் விளக்கம் தருக.
6. பெயர்ச்சொல்லின் வகைகள் யாவை? விளக்குக.
7. திணை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
8. பால் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

@KTBS NOT TO BE REPUBLISHED

9. எண் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? விளக்குக.

10. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

11. காலம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?

12. நிகழ்காலத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**செய்முறை:-**

திணை, பால், எண், இடம், காலம் போன்றவற்றிற்கு மின்னட்டை தயார் செய்து பொருத்திக் காட்டி விளையாடி மகிழ்க.

## 8. வினைச் சொல்

**உடன்பாட்டு வினை:-** செயல் நிகழ்வதை உணர்த்துவது உடன்பாட்டு வினையாகும்.

(எ.டு) நடந்தான், உண்கிறான், படிப்பான்

**எதிர்மறை வினை:-** செயல் நிகழாததை உணர்த்துவது எதிர்மறை வினையாகும்.

(எ.டு) :- படிக்கவில்லை, உண்ணான்

இச் சொற்களில் படிக்கும் செயலும், உண்ணும் செயலும் நிகழாததை உணர்த்து கின்றன.

**தன்வினை:-** செய்பவன் செய்கின்ற செயலைக் குறிக்கும் சொல் தன்வினையாகும்.

(எ.டு):- இராமன் வந்தான்
மாதவி ஆடினாள்

**பிறவினை:-** ஒருவன் ஒரு செயலைத் தானே செய்யாமல், பிறரைக் கொண்டு செய்வித்தலைக் குறிக்கும் வினைகள் பிறவினைகளாகும்.

(எ.டு) அரசன் கோயிலைக் கட்டுவித்தான்
ஆசிரியர் மாணவனைப் படிப்பித்தார்

NOT TO BE REPUBLISHED @KTBS

**செய்வினை:-** ஒரு வாக்கியத்தில் வருகின்ற வினை, எழுவாய்க்குரிய விகுதியைப் பெற்று வரும். செயப்படு பொருள் இருக்கும். இவ்வாறு வரும் வினை செய்வினை எனப்படும்.

(எ.டு) வ. உ. சிதம்பரம் கப்பலை ஓட்டினார்

இராமன் இராவணனைக் கொன்றான்

**செயப்பாட்டு வினை:-** ஒரு பொருள் செய்யப்பட்டதைக் குறிக்கும் வினை, செயப்பாட்டு வினை எனப்படும். வினைச் சொல்லோடு படு, உண், போன்ற ஒரு துணை வினை சேரும். எழுவாயோடு ஆல்-வேற்றுமை உருபு சேரும். செயப்படு பொருளின் ஐ உருபு நீக்கப் படும். இவ்வாறு மாறி வருகின்ற வினைகள், செயப்பாட்டு வினைகளாகும். அவ்வாக்கியங்கள் செயப்பாட்டு வினை வாக்கியங்களாகும்.

(எ.டு) அரசனால் கோயில் கட்டப்பட்டது

திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

## 9. யாப்பு

யாப்பு என்பது புலவர்களால் செய்யப்பெறும் செய்யுள் எனப்பொருள் படும். செய்யுளை இயற்றுவதற்குரிய இலக்கணத்தைக் கூறுவது யாப்பிலக்கணம் எனப்படும்.

யாப்பு இலக்கணத்தின் உறுப்புக்கள் ஆறு. அவை, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன ஆகும்.

**1. எழுத்து:-** தமிழில் உள்ள உயிர் எழுத்தும், மெய்யெழுத்தும் முதல் எழுத்துக்கள் எனப்படும். உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துக்கள் ஆகும்.

**2. அசை:-** எழுத்துக்களால் ஆனது அசை எனப்படும். இது நேரசை, நிரையசை என இருவகைப் படும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

குறில் தனித்தும், குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும், நெடில் ஒற்றடுத்தும் வருவது நேரசை எனப்படும்.

(எ.டு) கற்/க

கற் - குறில் ஒற்றடுத்து வந்த நேரசை

க - குறில் தனித்து வந்த நேரசை

போ/னான்

போ - நெடில் தனித்து வந்த நேரசை

னான் - நெடில் ஒற்றடுத்து வந்த நேரசை

இரு குறில் இணைந்தும், இரு குறில் இணைந்து ஒற்றடுத்தும், குறில் நெடில் இணைந்தும், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்தும் வருவது நிரையசை எனப்படும்.

பல - இரு குறில் இணைந்து வந்த நிரையசை

மலர் - இரு குறில் இணைந்து ஒற்றடுத்த வந்த நிரையசை

பலா - குறில் நெடில் இணைந்து வந்த நிரையசை

கலாம் - குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசை.

**3. சீர்:-** அசைகளால் ஆவது சீர். இது ஓரசைச்சீர் முதல் நான்கு அசைச் சீர்வரை நான்கு வகையாக உள்ளன.

**ஓரசைச் சீர்:-** இது இரண்டு வகைப்படும்

நேர் - நாள்

நிரை - மலர்

**ஈரசைச் சீர் நான்கு அவையாவன:-**

| | | |
|---|---|---|
| நேர் நேர் | - தேமா | மாச்சீர் |
| நிரைநேர் | - புளிமா | |
| நிரைநிரை | - கருவிளம் | விளச்சீர் |
| நேர் நிரை | - கூவிளம் | |

© KTBS NOT TO BE REPUBLISHED

**மூவசைச்சீர் எட்டு அவையாவன:-**

| | | | |
|---|---|---|---|
| நேர் நேர் நேர் | - | தேமாங்காய் | காய்ச்சீர் (வெண்பா உரிச்சீர்) |
| நிரை நேர் நேர் | - | புளிமாங்காய் | |
| நிரை நிரை நேர் | - | கருவிளங்காய் | |
| நேர் நிரை நேர் | - | கூவிளங்காய் | |
| நேர் நேர் நிரை | - | தேமாங்கனி | கனிச்சீர் (வஞ்சி உரிச்சீர்) |
| நிரை நேர் நிரை | - | புளிமாங்கனி | |
| நிரை நிரை நிரை | - | கருவிளங்கனி | |
| நேர் நிரை நிரை | - | கூவிளங்கனி | |

**வினாக்கள்:**

1. யாப்பு என்றால் என்ன?
2. யாப்பு இலக்கணத்தின் உறுப்புக்கள் எத்தனை? அவை யாவை?
3. அசை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
4. சீர் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
5. நேரசை விளக்குக.
6. நிரை யசை விளக்குக.
7. ஈரசைச் சீர் என்றால் என்ன? அவை யாவை?
8. மாச்சீர், விளச்சீர் விளக்குக.
9. மூவசைச் சீர்கள் எத்தனை? அவை யாவை?
10. காய்ச்சீர், கனிச்சீர் விளக்குக.

@KTBS NOT TO BE REPUBLISHED

## 10. அணி

அணி என்பதற்கு அழகு என்பது பொருள். செய்யுளில் அமைந்துள்ள சொல்லழகு, பொருளழகு முதலியவற்றைக் கூறுவது அணி இலக்கணமாகும். தமிழில் 'தண்டி' என்ற ஆசிரியரால் இயற்றப்பட்ட 'தண்டியலங்காரம்' என்ற நூல் 64 வகையான அணிகளைப் பற்றி விளக்கிக் கூறுகிறது.

**உவமையணி:-** தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை விளக்குவது உவமை எனப்படும். உவமைகள் பண்பு, தொழில், பயன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரும்.

(எ.டு) நிலா போன்ற முகம் - பண்பு அடிப்படை

மலர் போன்ற முகம் - பண்பு, பயன் அடிப்படை

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்

எழுமையும் ஏமாப்பு உடைத்து."

இக்குறட்பாவில் ஆமையை - நமது உடலின் ஐம்புலன்களில் அடக்கத்திற்கு உவமைப்படுத்தி உள்ளமையால், இக்குறட்பாவில் உவமை அணி அமைந்துள்ளது.

**உருவக அணி:-** செய்யுளில் வரும் பொருளையும், உவமையையும் முறையே முன்னும் பின்னுமாய் வேறுபாடு இல்லாமல் ஒன்றுபடுத்திக் கூறுவது உருவக அணியாகும். இதற்கு ஆகிய என்பது உருபாக வரும். இவ்வுருபு மறைந்தும் வெளிப்பட்டும் வரும்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

(எ.டு):- வையம் தகழியா வார்கடலே நெய்யாக

வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய

சுடராழி யானடிக்கே சூட்டுவன்சொல் மாலை

இடராழி நீங்குகவே என்று

இப்பாடலில் உலகத்தை அகல் எனவும், கடலை நெய்யாகவும், சூரியனை விளக்காகவும், சொல்லை மாலையாகவும், துன்பத்தைக் கடலாகவும் உருவகம் செய்துள்ளமையால், இப்பாடல் உருவக அணி ஆகும்.

**வினாக்கள்:-**

1. அணி என்றால் என்ன? அது எவற்றைப்பற்றிக் கூறுகிறது?
2. தண்டியலங்காரம் என்ற நூலை இயற்றியவர் யார்?
3. உவமையணியை எடுத்துக் காட்டுடன் விளக்குக?
4. உருவக அணி விளக்குக.

@KTBS NOT TO BE REPUBLISHED

# NOTE

@KTBS
NOT TO BE REPUBLISHED